ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | வெளி நாடு 0-1-6 / உள் நாடு 0-1-0

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன்பணம் | — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, | — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கில ஹ மார்கழி மீ 8 உ (22—12—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 33



சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண்காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்மம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்தி பெற்ற

## மகா சந்தனாதி தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேகநீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காது மந்தம், மண்டை குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டை சூடு, நிரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒருமுறை இந்த தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒருமுறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4. 12 அவுன்ஸ் டின் ரூ. 2-2-0.

## சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து

கைகால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப் படுத்தி வீரிய விருத்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் உண்டாக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0.

## மகா வில்வாதி லேகியம்

அஜீரணம், வயிறுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊறல், நெஞ்செரிவு, வாந்தி, தலை சுற்றல், வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், சுவரோகம், மயக்கம், கைகால் குடைச்சல் முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீரண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்க வேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச்சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது. பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. கார மாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2-0-0. மார்தக் குடோரி எண்ணெய் ரூ, 1-0-0,

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்ப வேண்டும். விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜெண்டுகள் தேவை.

**டி. சி. சிங்காரம் அண்டு கோ.,**
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

# தமிழரசு

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் இனிது கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள். பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வளர்த்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

| | |
|---|---|
| வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0 |
| | வெளிநாடு ரூ. 4-0-0 |

**'தமிழரசு' காரிய நிலயம்,**

31, வைத்தியநாத முதலி வீதி,
சென்னை.

(65)



வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

# 100வருஷ பஞ்சாங்கம்

இதில் இங்கிலீஷ் 1854 முதல் 1954 வரை எல்லா வருடங்களுடன் தமிழ், இங்கிலீஷ் வருடம், மாதம், தேதி, கிழமையாகியவைகள் அடங்கியுள்ளது.

மற்றும் (இங். 1854) ஆனந்தாதி! ஆனந்த அக்ஷயாந்தம் (இங். 1927) வரை பஞ்சாங்கங்களின் எல்லா அங்கங்களும் அடங்கிய முழுப்பகுதியும் சேர்ந்துள்ளதுடன் உபயோகமுள்ள பல சோதிட கணித சாரப்பொக்கிஷமும் மற்றும் பல உலகசம்பவக் குறிப்புக்களும் சேர்க்கப்பெற்று சுமார் 1200 பக்கங்களுடன் உயர்ந்த கில்ட் அழுத்திய சிறந்த பயிண்டுள்ளது. இது பொது மக்கட்கும், வக்கீல்கள், லைப்ரேரிகள், மிராசுதாரர்கள், சோதிடர்கள் மற்று மனைவருக்கும் உபயோகமுள்ளது. குறைந்த விலை.

விலை ரூ. 7-0-0 தபால் செலவு ரூ. 0-12-0.

வெளிநாட்டிற்கு தபாற்கூலி வேறு முன்பணம் அனுப்பவும்.

எஸ். கூடலிங்கம், புத்தகசாலை, மதுரை (S. I.)



# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

### மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது:—"நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டர்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை

(28)



வெளியாய் விட்டது! வெளியாய் விட்டது!!

தேன் ஒழுகும் சிறந்த நாவல் கூட்டங்கள்.

## நாவிரு நவீனக்களஞ்சியம்

(முதல்பாகம்)

1. விருப்பமற்ற காதலர் (அல்லது மகளிர் மாண்பு) 2. ரோஜா திருந்தியது. 3. தேவகானம், 4. ஆச்சரியமான சமயம், ஆகிய நான்கு நவரசம் ததும்பும் நவீனங்கள் அடங்கியது விலை அணா 10. தபால் செலவு 0-5-0.

## திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும் சுத்தப் பதிப்பு கிளேஸ்காகிதம் சுமார் 300 பக்கங்கள் அடங்கியது. எல்லாத் தமிழ்நாட்டுப் பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பெற்றது.

விலை அணா 0 8 0.
தபால் செலவு 0-6-0.

## ஸ்ரீ லேகலன்

நவீன துப்பறியும் தமிழ்நாவல். வாசிக்கக் கையிலெடுத்தால் முடிக்காமல் கீழே வைக்க முடியாது.

விலை ரூபா 1 4 0.
தபால் செலவு 0-6-0.

இம்மூன்று புத்தகத்திற்கும் சேர்த்து முன்பணம் 2-6-0 மணியார்டர் செய்வோருக்கு தபால் செலவு இனாம். ஒரு ரூபாய்க்குக் குறைவாக வி. பி. செய்ய முடியாது. ஒரு ரூபாய்க்குக் குறைந்த புத்தகம் வேண்டுவோர் புத்தக கிரயத்தோடு 2 அணா சேர்த்து தபால் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

தமிழ் நூற் பதிப்புக்கழகம், காஞ்சீபுரம்.

# சனாதன தருமிகளென்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் சொல்லுவது அபத்தமென்பதை நிரூபிக்கும் நியாயங்கள்

(கைவல்யம்.

சனாதன தருமிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் கூடும் சபைகளில் சாரதா விவாகச்சட்டத்தால் இந்து சமயத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்றும், சனாதன தருமிகளுக்கு நஷ்டம் நேர்ந்துவிட்டதென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது அத்தனையும் எல்லா நியாயங்களுக்கும் விரோதமானதென்று இந்த வியாசத்தால் எடுத்துக்காட்டுகிறேன்.

ஒன்று:—கடவுள்; அவர் வேதம்; அதைச்சொன்னரிஷிகள்; அதை நடத்திக்காட்டின அவதார புருஷர்கள்; அதைப்பரப்பின ஆச்சாரிகள்; இரண்டு:-ராஜாங்கம்; அதன் சட்டதிட்டங்கள்; மூன்று:-பூர்வீக ஜாதிவழக்கம்; காலத்தால் மாறவேண்டிய பழக்கங்கள். இம்மூன்றாலும் நம்முலகம்நடைபெற்றுவருகின்றன. இம்மூன்றிற்கும் அதன் பாகங்களுக்கும் சாஸ்திரத்தாலும் பூர்வீகவழக்கத்தாலும்பெரியவர்களின்நடக்கையாலும்சாரதாச்சட்டம் விரோதமடையவில்லை என்பதைசமூகங்களுக்கு விளங்கும்படியாக எடுத்துக்காட்டுகிறேன்.

கடவுளைப்பற்றிச் சொல்லுவது சமயம்; சமயமே கடவுள் சட்டத்தின் விதிகள்; பலவகைக்கொள்கைகளும், கோட்பாடுகளும், கர்மவிதிகளும், ஆசாரங்களும் ஒரு பெயரின்றி ஒரு தலைமைக்குட்படாமல் ஒரு சம்பிரதாயத்துக்குள்ளடங்காமல் இவையெல்லாம் ஒருங்கு சேரப்பெற்றதே நமது சமயம். இத்தன்மை பொருந்திய நமது சமயத்திற்கு இன்னசாஸ்திரம்தான் பிரமாணமென்று பெயரிடுவது கஷ்டமாகவிருக்கிறது. ஆயினும் நம்மிலுள்ள பற்பல சம்பிரதாயத்தாரும் ஒரே மனதாய் ஒப்புக்கொள்வது வேதத்தையே. அந்த வேதத்தில் அத்யாத்ம போதங்களடங்கியதே ஞான காண்டம். அதற்கு உபநிஷத்துக்களென்றும் வேதாந்தமென்றும், வேதசுருதிகளென்றும் பெயர்களேற்பட்டிருக்கின்றன. அதில்தான் கடவுள் தன்மைகளிருக்கின்றன. அது நமது ஆச்சாரிகளாலும், தத்துவவாதிகளாலும், நூலாசிரியர்களாலும் அவர்களது த்வைதிகளாலும்விசிஷ்டாத்வைதிகளாலும் அத்வைதிகளாலும் உத்தம பிரமாணமாகக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி அவர்கள்கொள்ளாராயின் அவர்களைச் சேர்ந்த சம்பிரதாயம் அவைதிகமாகும். இந்துகளுக்கு வேதமே பிரமாணம். அதை ஒத்துக்கொண்டு அப்படியிருந்தாலும் அவ்வேதத்தின் சித்தாந்தங்களைத் தெளிவாய் எடுத்து விளக்குவதற்கு ஸ்மிருதிகளும்புராணங்களும் ஏற்பட்டிருக்கின்றனவென்று சொல்லுவார்கள். ஸ்மிருதிகளும் புராணங்களும் பிற்காலத்தில் உண்டானவைகள். இவைகள் அவரவர்கள் ஆதிக்கத்திற்கும் எண்ணத்திற்கும் ஏற்படுத்திக் கொண்டவைகள். சன சமூகங்களை ஏமாற்றி தங்கள் ஆதிக்கங்களை நிலைத்திருக்கொள்ளவே இவைகளையும் வேதமென்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். வேதத்திற்குள்ள பிரமாண்யம் ஸ்மிருதிகளுக்கும் புராணங்களுக்கும் கிடையாது. ஸ்மிருதி புராணங்கள் பிரமாண்யமென்று சொல்லிக் கொண்டாலும் அவைகள் வேதசுருதிக்கு முரணாவேயிருக்கும். அதனால் ஸ்மிருதிபுராணங்களைத் தள்ளி வேத சுருதியே பிரமாண்யமாகக்கொள்ள வேண்டுமென்பது சித்தாந்தம். ஆனால், சமூகங்களை ஏமாற்றி தங்கள் உயர்வைக் காப்பாற்றுவதற்குள் ஸ்மிருதி புராணங்களைப் பிரமாண்யமாகக் காட்டுவதும் சமயத்தைச் சித்தாந்தப்படுத்துகையில் வேதசுருதிகளை ஆதாரம் காட்டுவதும் இந்து சமயத்தில் ஆதிக்கம் வகித்திருப்பவர்களின் வழக்கம். ஆகவே வேத சுருதியில் தான் கடவுள் தன்மையும் ஆத்ம நிச்சயமுமிருக்கின்றன. அவைகளுக்குக் கர்த்தாவான கடவுள் அதில் பாலிய விவாகத்தைச் சொல்லவுமில்லை. அதனால் சாரதாச்சட்டம் கடவுளுக்கு விரோதமானதல்ல.

அந்த வேத முதற்காரணனான கடவுளிடமுள்ள சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலுக்கு கர்த்தாக்களாய் அவரேபிர்மா, விஷ்ணு, ருத்திரன் என்பதாகப்பிரிந்து விளங்கப்பட்ட கடவுள்களும், அவர்களுடைய தொழிலின் தன்மைகளை விளக்கிக்காட்டுவதற்காக சரஸ்வதி லெட்சுமி, காளி என்னும் பெயரால் சொல்லப்படும் அவர்கள் பத்னிகளும் எப்படி விவாகம் செய்துகொண்டார்கள் என்பதை விட்டுவிடுவோம். ஏனென்றால், சிருஷ்டியென்னும் பிர்மா தோன்றின உடனே அறிவு என்னும் சரஸ்வதி தோன்றிற்று. ஸ்திதியென்னும் விஷ்ணு தோன்றின உடனே பிரகாசமென்னும் லெட்சுமி தோன்றிற்று. சம்ஹாரமென்னும் உருத்திரன் தோன்றின உடனே சம்ஹாரிகளும் காளியும் தோன்றிற்று. ஆகவே, மும்மூர்த்திகளும் அவர்கள் தேவிமார்களும் ஏககாலத்தில் முதற்காரணமான கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்பதற்கும் இவர்கள் கலியாணங்களுக்கும் போதுமான சரித்திரங்களில்லை. அவற்றையும் தத்துவங்களென்று நிறுத்திவிடுவோம். என்றாலும் சாரதாச் சட்டம் இவர்களுக்கு விரோதமில்லை. எப்படியென்னில், எட்டுபத்து வயதுப் பெண்களுக்கு விவாகத்தை அறியும் தன்மையில்லை. அறியும் தன்மையில்லா விட்டால் சரஸ்வதிக்கு விரோதம். பத்து எட்டு வயது கலியாணம் அழகாகாது. அழகில்லாவிட்டால் லெட்சுமிக்கு ஆகாது. பத்து எட்டு வயதுப்பெண்கள் வாழ்க்கையில் மூப்பில்லாமல் அழிவது காளிக்கும் சம்மதமிருக்காது; ஆனதால் அறிவு வந்து அழகிருந்து அதற்குத் தகுந்த மூப்பிருந்து கலியாணம் செய்வதே மும்மூர்த்திகளுக்கும் அவர்கள் பத்னிமார்களுக்கும் சம்மதமாகவிருக்கும்.

மேற்சொன்ன மும்மூர்த்திகளும் அவர்கள் பத்னிமார்களும் மனிதர்களுக்காக பூலோகத்தில் பிறந்து நடந்து காட்டின அவர்கள் கலியாணங்களும் சாரதாச் சட்டத்திற்கு விரோதமல்ல. எப்படி என்றால், பார்வதி மலையரசன் மகளாகப்பிறந்து வளர்ந்து பக்குவமடைந்து நாயகனைத் தேடித்திரிகையிலேயே சிவபெருமான் வந்து விவாகம் செய்து கொண்டார். பார்வதி மதுரைப் பாண்டியனுக்கு மகள் மீனாட்சியாகப் பிறந்து புருஷனையடையும் பக்குவமடைந்து திக்கு விஜயம் செய்கையில் சிவ பெருமான் வந்து விவாகம் செய்துகொண்டார்.

சிவபெருமானின் பிள்ளையான ஆறுமுகக் கடவுள் சூரனைக் கொன்று முடித்த திருப்திக்காக தேவேந்திரன் தன் பெண்ணான தெய்வயானையைக் கொடுத்தான். நாரதரால் கேள்விப்பட்டு வள்ளியம்மையை மோகித்து விவாகம் செய்து கொண்டார். இவர்கள் பக்குவமடைந்து புருஷனைத் தேடிக்கொண்டிருந்த பெண்களேயல்லாமல் பத்தெட்டு வயது பெண்களல்லவே? சிவபெருமானின் பெரிய பிள்ளையான விநாயகர் மடியிலும் தொடையிலும் இரண்டு பக்கங்களிலும் ஐந்து பெண்களிருக்கிறார்கள். அவர் அவர்களை எப்பொழுது கலியாணம் செய்துகொண்டாரோ இல்லையோ என்பது எனக்குத் தெரியாது. நீங்களே கவனித்துப் பாருங்கள். விஷ்ணு அவதாரங்களில் இராமர் லட்சுமியாகப் பிறந்த சீதையை விவாகம் செய்து கொண்டார். இராமரைக் கண்டு சீதையும், சீதையைக் கண்டு இராமரும் மோகித்து இரவெல்லாம் தூக்கமில்லாமலிருந்தார்கள் என்பது இராமாயணக் கதை. இந்த சம்பவம் பத்தெட்டு வயதில் நிகழக் கூடியதல்லவே? ஸ்ரீ கிருஷ்ணன் ருக்குமணி சத்தியபாமையைக் கலியாணம் பண்ணிக் கொண்டதும் அதன் வர்ணனைகளும் தேரில் தூக்கிக்கொண்டு போனதையும் படித்தவர்கள் ருக்குமணி சத்தியபாமைக்கு பத்தெட்டு வயதென்று சொல்லுவார்களா? பௌத்தரை விஷ்ணுவின் அவதாரமென்றாலும் அவர் பெண் ஜாதியை லட்சுமியாகப் பலர் கொள்ளுவதில்லை. அதை விட்டு விடுவோம். இந்த சமயத்தவர்களான நமக்கு மீனாட்சி சுந்தரேஸ்வரர், இராமர், கிருஷ்ணன், சுப்பிரமணியர் அவர்களை விட தெய்வங்களுண்டா? இவர்கள் கலியாணங்கள் சாரதா விவாகச் சட்டத்திற்கு எந்த விதத்திலும் விரோதமல்லவே.

தேவர்கள், கெந்தருவர்கள், மருத்துக்கள், சூரியர்கள், ஆதித்யர்கள் அசுவனி தேவர்கள், வசுக்கள், சித்தர்கள், ஸாத்தியர்கள் இன்னும் பல பிரிவின்தேவர்கள் முதலியவர்களின் விவாகங்களெல்லாம் பூப்படைந்த பின்னே செய்ததாக பல கதைகளிருக்கின்றன. அவைகளையெல்லாம் எழுதுவது அனாவசியம், இடமுமில்லை.

கடவுளைக் காண்பதற்கு வேதத்தைக் கண்ட ரிஷிகளுக்குச் சாரதா சட்டம் விரோதமானதோவென்றால், அதுவுமில்லை. வேதமென்னும் ஞானத்திரட்டு ரிஷிகளென்ற சில புருஷர்களால் காணப்பட்ட உண்மைகள். ரிஷியென்றால் மந்திரஷ்டா அதாவது கருத்தைக் கண்டறிவோன் என்று பொருள். எந்த ரிஷியும் பொதுவான ஞானத்தைச் சொன்னனேயல்லாமல் புராணத்தைச் சொல்லவில்லை ரிஷிகள் பெயரைப் போட்டு பண்டிதர்கள்புராணங்களைச் சொன்னார்கள். சுனம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர்கள் அநேக புராணங்களைச் சொன்னார். இவர் பண்டிதரேயல்லாமல் ரிஷியல்லவென்பதும் உங்களுக்குத் தெரியும். எந்த ரிஷிக்கும் ஜாதியில்லை; சமய வேறுபாடில்லை. எட்டு பத்துவயதுப்பெண்ணை விவாகம் செய்து பூப்படைந்த எழாம்நாள் பிள்ளைபெற்றதாக ரிஷிகளின் சரித்திரங்களில்லை. பக்குவமாகி அநேக நாளான பெண்களைஜாதியின் கட்டுப்பாடில்லாமல் விவாகம் செய்துகொண்டதாகவே அவர்கள் கதைகள் சொல்லுகின்றன. சனாதன தருமத்திற்கு முக்கியகர்த்தாக்களான வசிஷ்டர், பராசர், வியாசர் முதலியவர்கள் ஜாதிவித்தியாசமில்லாமல் வயது வந்த பெண்களைக்கூடியே பிறந்தவர்களும், சந்ததியை உண்டுபண்ணினவர்களுமானவர்கள் என்பது அவர்கள் சரித்திரம் படித்த உங்களுக்குத் தெரியும். அதனால் சாரதாச்சட்டம் ரிஷிகளுக்கும் விரோதமானதல்ல.

பார்ப்பார்களால்மதிக்கப்படாத சூத்திர ஆச்சாரிகளெனப்பட்டவர்களையும் சூத்திரர்கள் என்னப்பட்டவர்களுக்கு ஆச்சாரிகளாகவிருப்பவர்களையும் விட்டுவிட்டுப் பார்ப்பன ஆச்சாரிகளைப்பற்றியே கவனிப்போம். ஒரு நம் பூதிரி விதவைப்பெண் கோவிலுக்குப்போய்க் கொண்டு வந்தாள். அந்த விதவை ஈஸ்வர அனுக்கிரகத்தால் கர்ப்பமுற்று சங்கராச்சாரி பிறந்தார் என்று அவர் கதை சொல்லுகின்றன. அந்த சங்கராச்சாரியின் ஜாதியான நம்பூதிரிப்பார்ப்பனர்களில் பெண்கள் ருதுவாயும் ருதுவாகி அநேக நாள் பொறுத்தும் விவாகம் செய்வதேவழக்கம் அந்தசங்கராச்சாரியின் ஸ்தானத்தில் இப்பொழுது இருந்துவரும் சங்கராச்சாரியும் அவர்

(இதின் தொடர்ச்சி 15-ல் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—சுந்தர காண்டம்

கட்டுரை—8

(திரு: சந்திரசேகரப் பாவலர்)

சருக்கங்கள் 34 முதல் 36 முடிய:-

அனுமான், "அம்மா! இராமனும் இலக்குவனும் தமது நலத்தை உன்னிடம் தெரிவிக்க அனுப்பினர்" என்றான். சீதை அதுகேட்டு மகிழ்ச்சியடைந்தாள். அவ்விருவரும் வெகு நம்பிக்கையாய்ப் பேசிக்கொண்டார்கள். அனுமான் சீதையின் கிட்ட நெருங்கினான். அவன் கிட்ட நெருங்க நெருங்க அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. உடனே அவள் "ஐயோ! மோசம்போனேனே" என்று கூவிக் கீழே உட்கார்ந்து கண்ணைமூடிக்கொண்டாள். பின் அவள் தன்னை அவன் வணங்கி நிற்பதைக்கண்டு, "இராவணனே இவ்வாறு மாறுவேடங்கொண்டு வந்தான். என்னைத் துன்புறுத்தாதே! இவ்வளவு காலங்கழித்து இராமனிடமிருந்து தூதன் வர நியாயமில்லை" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு கூறினாள். அனுமான் "நான் இராமனுடைய தூதனே! என்னை நம்பு. நான் இராவணன் அல்லேன்" என்றனன். சீதை, "அப்படியானால் உனக்கும் இராமனுக்கும் நட்பு எப்படி ஏற்பட்டது? இராமனுடைய அடை, தோள் முதலிய உறுப்புக்களை விவரித்துரை. இலக்குவன் எத்தகையன்?" என வினவினாள்.

அனுமான், "அம்ம! இராமனுடைய உருவை விவரிக்கிறேன். கவனித்துக் கேள். அவன் சர்வாங்க அழகன். அவனுடைய அழகிய கண்கள் எல்லோரையும் மயக்குகின்றன. குரங்காகிய நானே மயங்குகிறேன். உனக்கல்லவா அவைகளின் தன்மை தெரியும்? காமங்களை அடக்கின் முனிவரே அவனைக்கண்டு மயங்குகிறார்கள். எல்லாராலும் வணங்கத் தகுந்தவன். பார்ப்பனர்களை பயபக்தியுடன் வணங்குபவன். அவனுடைய புருவம் தோள் விதை இவை மூன்றும் நீளமாயும், மயிர்நுனியும் விதைகளும் ஏறக்குறைவில்லாமலும் இருக்கும். தலை மயிர் ஆண்குறி இவை மழமழப்பாயும், ஆண்குறி சிறிதாகவும் இருக்கும். விதைகள், கைகள், கால்கள் பின்பாகங்கள் இவை சமமாயிருக்கும். பின்புறம் விரல்கள் ஆண்குறி இவை நீண்டிருக்கும். தலைமயிர் மீசை நகம் ஆண்குறி அறிவு இவை நுட்பமாக இருக்கும். யாருக்கும் இன்சொல்லுடையவன். இலக்குவனும் அப்படியே. இராமலக்குவர் உன்னைத் தேடிவரும்வழியில் சுக்கிரீவனோடு நண்பாகினர் ... சுக்கிரீவனுடன் நட்படைந்தனர். உன் நகைகளைக் கண்டு வருந்தி காமத்தீயால் எரிக்கப்பட்டு இராமன் வருந்துகின்றான். நான் இராமனுக்கு அந்தரங்கமானவன். வானரர் உன்னைத்தேடுகின்றனர். அவருள் ஒரு பகுதியாகிய நாங்கள் அங்கதன் தலைமையில் வந்து உன்னைக்காணாமல் பட்டினிகிடந்து உயிரைவிடத் தீர்மானித்தோம் அப்போது அங்கதன் பழைய கதைகளைச் சொல்லி சடாயு இறந்ததையும் கூறிப் புலம்பினான் அப்போது சடாயுவின் அண்ணனான சம்பாதிதோன்றி தம்பி இறந்தமைக்கு வருந்தி நீ இங்கிருப்பதைக்கூறினான். உடனே நான் கடலைத்தாண்டி இங்குவந்து தேடி உன்னைக்கண்டேன். இனியாவது சந்தேகத்தை விடு. நான் இராவணனல்லேன். இராமன் இராவணனை வென்று உன்னை அடைவான். என் தந்தை கேசரி என்ற வானரத்தலைவன். சில முனிவர் சம்பசாதனனென்ற அசுரன் தம்மை வருத்துவதாகக் கூற கேசரி அங்கே சென்று அவனைக்கொன்றான். அச்சமயத்தில் நான் கேசரியின் மனைவி இடத்தில் வாயுபகவானுக்குப் பிறந்தேன்" என்று விரித்துரைத்தான். அதைக்கேட்டுச் சீதை முழு நம்பிக்கையடைந்தாள். அனுமான், "நான் குரங்கென்று நினைக்கவேண்டாம். கேசரி அசுரனைக் கொல்லப் போயிருந்த போது நான் அவனுடைய மனைவிக்குக் காற்றரசனிடம் பிறந்தவனாதலால் மிக வலிமையுடையேன்" என்று கூறி இராமனுடைய மோதிரத்தை அவளிடம் கொடுத்தான்.

சீதை அதைக்கண்டு மிக மகிழ்ச்சியடைந்தாள். சம்போக காலங்களில் இராமனுக்கும் தனக்கும் நேரிடும் சச்சரவுக் காலங்களில் இருவரும்பேசாமலிருக்க இராமன் மெல்ல அதைக் கீழே நழுவவிட தான் எடுத்துக் கொடுக்க முகத்தான் அவனோடு பேசி ஊடல் தீர்த்த சமயங்களை அவள் எண்ணினாள். தன் திருமணத்தின்போது அவன் அணிந்திருந்தது அது அதை அவள் தன் மார்போடணைத்துக்கொண்டாள். அவள் 'இராமன் நலமாயிருக்கிறாரா? என்னிடம் அன்பு குறையாமலிருக்கிறாரா? என்னைத்திரும்ப அழைத்துப் போவாரா?' எனவினவினாள். அதற்கு அனுமான், 'முன்னர் அரக்லாதனென்னும் அசுரன் இந்திரனுடைய மனைவியாகிய சசிதேவியைக்கொண்டுபோய் விட்டான். அவ்விடத்தை இந்திரன் நெடுங்காலம் கழித்து கண்டு பிடித்தான். அதுபோல இராமன் இப்போது உன்னை வந்து மீட்டான். இராமன் கள்ளையுண்டு புலாலருந்துவதை இப்போது விட்டு விட்டுக் காய் கனிகளையே உண்ணுகிறான். உன்னை நினைத்து அடிக்கடி பெருமூச்சு விடுகிறான். தூக்குவதில்லை. உன்னை மீட்கத்தவறான்' என்று கூறினான். இதனால் சீதை கொஞ்சம் கவலை ஒழிந்தாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அனுமான் இராமனைப்பற்றித் தெரிவித்தவுடனே மகிழ்ந்த சீதை அவனோடு நம்பிக்கையாகப் பேசினளாம். ஆனால், அவன் கிட்ட நெருங்க நெருங்க அவளுக்கு அவன் இராவணனோ என ஐயமுண்டாகி "மோசம் போனேனே" எனக் கூப்பாடு போட்டாளாம். இவை முன்னுக்குப்பின் முரணாக இருக்கின்றது. இதனால் அவள் சந்தேகப்படும்படியாக அனுமான் அவளை நெருங்கியிருக்கிறான். அவன் இவ்வாறு அவளை நெருங்குவதற்குக் காரணந்தான் யாதோ? பேச்சுக் கேட்குமளவு நெருங்கி மெதுவாகப் பேசவதற்காகவா? அவன் மரத்தின்மேலிருந்து இராமனைப்பற்றிய செய்திகளைப் பேசியதெல்லாம் அவள் காதில் நன்றாக விழவில்லையா? பின்னையேன் அவன் அவளை அவள் சந்தேகப்படும்படி நெருங்கியிருக்க வேண்டும்? "இராமன் ஒரு பெண்ணுக்காக இத்தனை பாடுபடுகின்றானே" 'என அவனை எளனம் செய்தேன். அதன் உண்மை இவளைக் கண்டபோதல்லவா தெரிகிறது. இக்கட்டழகியைப் பிரிந்து அவன் உயிருடனிருக்கின்றானே! கோவைக் கனிபோன்ற உதடுகளையும், கட்டமிட்ட அழகான கொங்கைகளையும் கவனிக்கையில் இவளே சீதை மன்மதனுடைய மனைவியாகிய இரதி போல விளங்குகிறாள்' என அவளுடைய அழகைப் பாராட்டி மரத்தில் மறைந்திருந்து கொண்டே அடிக்கடி அவளைக் கண்டு கண்டு மகிழ்ந்தவன் தானே அனுமான். ஆதலின் அவன் வேறு எந் நோக்கங் கொண்டு அவள் ஐயுற அவளை அவ்வாறு நெருங்கியிருக்கக்கூடும்? அறிஞரே சிந்தியுங்கள்!

சீதை இராமனுடைய அடை முதலிய உறுப்புக்களை விவரித்துரைக்க வேண்டினள் அனுமானை அவ்வந்தரங்க உறுப்புக்களைப் பார்த்திருப்பவனென அவள் எங்ஙனம் எதிர்பார்த்தாளோ?

அனுமான் இராமனைப்பற்றிச் சீதையிடம் 'அவன் சர்வாங்கஅழகன் அவனைக் கண்டு குரங்காகிய நானே மயங்குகிறேன். காமங்களை அடக்கிய முனிவரே அவனைக்கண்டு மயங்குகிறார்கள்' என்று கூறினான். இராமனுடைய அழகில் அனுமான் தான் எவ்வளவு தூரம் மயங்கி ஈடுபட்டிருந்தனனெனக் கூறுகிறான், ஆண்மையிலும் மக்களை மிக ஈடுபடுத்தும் போலும்!

"இராமன் பார்ப்பனர்களை பயபக்தியுடன் வணங்குபவன்" என அனுமான் கூற்றாக வால்மீகி கூறுகிறார். இது பார்ப்பனருடைய சூழ்ச்சி என்பதில் என்ன தடை? திருமாலின் தோற்றமாகிய இராமனே பார்ப்பனரை வழிபட்டவனென்னின், ஏனையோர் அவர்களை எவ்வாறு வழிபடவேண்டுமென்ற மயக்கத்தை அறியா மக்களிடைப் பரப்புவதற்காக இது எழுதப்பட்டதாக இருக்குமேயன்றி வேறு யாதாயிருக்கமுடியும்? இத்தகைய போலிவஞ்சகச் சூழ்ச்சியுரைகளில் அறிஞர் மயங்காதிருப்பாராக.

அனுமான் சீதையிடம் இராமனுடைய ஆண்குறியைப்பற்றியும் விதைகளைப்பற்றியும் மிக விவரித்துரைக்கின்றான். இதுஎவ்வளவு தூரம் உண்மையாயிருக்குமென அறிஞர் சிந்திக்கலாம். அவர்கள் முப்பத்தைந்தாம் சருக்கத்தைத் திருப்பிப்படிப்பார்களாக. மூலத்திலேனும் அன்றி எந்த மொழிபெயர்ப்பிலேனும் எடுத்துப்பார்த்தால் இவ்விவரங்களைஎளிதில்கண்டு கொள்ளலாம். ஒருபெண்பாலிடம் இத்தகைய விவரங்களை ஓர் கொழுத்த ஆண்மகன் உரைப்பதென்பது வியப்பாகவே இருக்கிறது! இதனை மேலும் சிந்தித்தால் இராமன் சீதையினுடைய கொங்கைக் குறிகளைப்பற்றிவிவரித்திருக்கவேண்டும். இல்லையென்றால் கம்பர் இராமன்வாக்கால் அவைகளை அனுமானுக்குரைத்ததாக விவரித்திருக்கவேண்டுமா. கம்பர் காலத்துப் பிரதிகளில் அவ்விவரிப்புக்கள் இருந்திருக்கவேண்டும் இதனை மேன் மேலும் ஆராய்ந்தால் ஆரியர் அக்காலத்தில் பல சமயங்களில் உடையில்லாமலிருந்திருப்பர் போலும்; அல்லது அனுமான் 'நான் இராமனுக்கு மிகவும் அந்தரங்கமானவன்' என்று கூறுகிறபடி இராமனுக்கு மிகவும் அந்தரங்கமானவனாய் அவனுடைய அந்தரங்க உறுப்புக்களின் பழக்க முடையவனாய் இருந்திருக்க வேண்டும்; இல்லையென்றால் அவைகளைப்பற்றி அனுமான் மாறி மாறி அவைகளின் தன்மைகளைச் சீதைக்கு எவ்வாறு விவரமாக எடுத்தியம்பி யிருக்க முடியுமா? தசரதனைப் போல அனுமானும் இராமனிடம் பழகினன் போலும்!!

அனுமான் தனது தாய் அஞ்சனை காற்றரசனோடு தன் தந்தையாகிய கேசரி ஊரிலில்லாதபோது விபசாரத்தனம் செய்து தன்னைப்பெற்றான் என்று உண்மையைக் கூறுகின்றான். இந்திரனுடைய மனைவியை முன் ஒரு அசுரன் தூக்கிக்கொண்டு போய் வைத்திருந்தனனும், அதைக் கண்டு பிடித்து அவன் மறுபடியும் இந்திராணியைக்கூட்டிக்கொண்டனனும்! அது ஆரியருள் இயற்கை போலும்!

"இராமன் இப்போது கட்குடியையும் புலாலுணவையும் விட்டு விட்டானென்று கூறுகிறான் அனுமான். இதனால் நாம் முன் எடுத்துக் காட்டியபடி இராமன் புலாலுண்டலையும் கட்குடியுமுடையவன் என்பது

(மறுபடி தொடர்ச்சி 14-ல் பார்க்க)

ரோஜா முத்தையா

# ஈ. வெ. ராமசாமியாரின் உரை

## துன்பத்தில் துயருறும் பெண்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும்

8-12-29ல் ஈரோடு காரை வாய்க்கால் கரையில் திரு. எஸ். ராமநாதன் எம். ஏ. பி. எல். தலைமையின் கீழ் கூடிய எஸ். குஞ்சிதத்தின் திருமண ஆதரவு கூட்டத்தில் திரு. ஈ. வெ ராமசாமியின் பிரசங்கத்தின் சாராம்சம்:—

சகோதரிகளே! சகோதரர்களே! சீர்திருத்தம் என்பதுபற்றி இதற்குமுன் நண்பர்கள் பேசினார்கள். அவர்கள் பிரசங்கத்தில் உற்சாக மிகுதியினால் சொன்ன மிக உயர்ந்த பொருள்களை யெல்லாம் பெரும்பாலும் நீங்கள் விளையாட்டாக எண்ணக்கூடும். இது வரையில் அவர்கள் நமதியக்கத்தின் முற்போக்கின் பொருட்டு பட்ட கஷ்டங்களையும் எடுத்துக்கொண்ட சிரமங்களையும் அவர்கள் எண்ணி இன்றைய சீர்திருத்த மண வைபவத்தின் உற்சாகத்தில் பேசினார்கள். அவர்கள் ஒவ்வொருவர் கூறிய சொற்பொழிவுகளிலும் மிக உயர்ந்த பொருள்கள் விளங்கியது. இவைகளை எல்லாம் கேட்ட நீங்கள் சில மாறுதல்களை அடையக்கூடும்.

இதுவரையில் பார்ப்பனனையும், அவன் கொள்கைகளையும், அவனது பழக்கவழக்கங்களையும் கண்டித்துவந்த நாங்களும்பார்ப்பனனை திட்டுகிறவர்கள் என்று எங்களை எண்ணியிருந்தீர்கள், பார்ப்பனனை திட்டிய காலம் மலையேறிபோய்விட்டது. ஏனெனில், முதலில் பார்ப்பனனை திட்டியபின்பே புத்தி சொல்லக்கூடிய நிலையில் இருந்தீர்கள். பார்ப்பான் இன்னின்னவை செய்கிறான், அதில் தீதிவைகள் என்பதை எடுத்துக்காட்டி பின்பு நீங்கள் அவனது ஏமாற்றத்தில் சிக்கக்கூடாது என்பதைஎச்சரிக்கை செய்ய வேண்டிய காலம் இன்றில்லாமல் போய்விட்டது.

இனிமேல் உங்கள்முட்டாள்தனத்தைப்பற்றியே பேசவேண்டும். இதுவரையில் பார்ப்பனனைஎடுத்துக்காட்டாக எடுத்துக்காட்டி அதன் மூலியமாய் சொன்னதில் உள்ள உண்மையான உங்கள் நிலையை நீங்கள் நன்குணர்ந்து விட்டீர்கள். உணர்ந்ததற்கு உதாரணமாகவே இன்று காரியத்தில் செய்ய காலம் வந்துவிட்டது. இன்றுவரை தமது நாட்டையும் நன்மையும் பாழ்படுத்தி வந்தபார்ப்பனனைப்பற்றி நான்கூறியதற்கு, பார்ப்பனனைநான் திட்டுவதால் தான் எனக்கு பிள்ளை குட்டி இல்லை என்றும், சிலர் பிள்ளைகுட்டிஎதுவும் இல்லை, அவனுக்கு பொறுப்பேது, அதனால்தான் பார்ப்பானை திட்டுகிறான். சாமியை பழிக்கிறான் என்றவர்களும், நாட்டிற்குக் கெட்டகாலம் பொல்லா காலத்துக்கு பிராமண தோஷமும் ஆகாத வேளைக்கு அன்னதுவேஷமும் என்று சொல்லி வந்தவர்களும் இன்று இதுவரை நம்மால் சொல்லப்பட்டது. யாவும் சரிதான் என்று ஒப்புக்கொண்டது போலவே, இத்திருமணத்தை பார்த்த பின்பும் இதுவரையில் நண்பர்கள் பேசியதின் அருமையானஉரைகளைக் கேட்ட பின்பும், சில உண்மைகளை உணர்ந்திருக்கக்கூடும். சென்னையில் இத்திருமணத்தை நடத்த முதலில் முடிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால், இத்தகைய சீர்திருத்த மணம் நடைபெறுவதால் உண்டாகும் உற்சாகத்தை இங்கு உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடிய அளவு சென்னையில் பயன்படாது போகும் என்பதாலேயே இத்திருமணத்தை இங்கு நடத்த நேர்ந்தது.

அங்கு எத்தனைய உண்மை உணர்ச்சியையோ, உற்சாகத்தையோ, காணமுடியாது. எதுவும் வெறும் வெளிவேஷமாகத்தான்மாறக்கூடும். நகரங்களில் எழும் எந்த ஊக்கமும் மக்களுக்கு உண்மையை உணர்த்தக்கூடியதாகவோ, நல்ல பலனை உண்டாக்கக்கூடியதாகவோ இருக்க முடியவில்லை. ஆதலால்தான் கலியாணத்தை இங்கு நடத்தினோம்.

காலையில் நடந்த திருமணத்திற்கு 50,60-க்கு மேற்பட்ட தந்திகளும், 150,200-க்கு மேற்பட்ட கடிதங்களும், வாழ்த்துச் செய்திகள் மூலமாய் கிடைத்தன. இதை அனுப்பியவர்கள் வேஷக்காரர்களல்ல, பொறுப்பற்றவர்களும், சாதாரணமானவர்களுமல்ல. நமது மாகாணத்தில் அறிவாளிகள் என்பவர்களாலும், பொறுப்புள்ளவர்கள் என்பவர்களாலும், அச்செய்திகள் அனுப்பப்பட்டது. உதாரணமாக திவான், மந்திரி,இவர்களிடமிருந்தும், ஜில்லா போர்டு தலைவர்கள், கட்சி தலைவர்கள் இவர்களிடமிருந்தும், இன்றைய திருமண முறையை ஆதரிக்குமுறையில் வாழ்த்துச் செய்திகள் கிட்டியது. அவைகள் காலை மணம் நடைபெறும் போது படித்துக்காட்டியதும் உங்களுக்கு தெரியும். மைசூர் திவான் ஜனாப் மகமத் மிர்ஸா இஸ்மாயில், நமது மாகாண மந்திரிகள் கனம் எஸ். முத்தையாமுதலியார், டாக்டர் சுப்பராயன், கவர்ன்மெண்டு நிர்வாகமெம்பர் பெரியார் ஜனப் ஸர் முகமது உஸ்மான், சௌந்திரபாண்டியன், இவர்களிடமிருந்து வாழ்த்துத் தந்திகள் கிடைத்தது. இதுஎதைகாட்டுகிறது?

இதுவரையில் நாம் சொல்லி வந்த நமது லட்சியங்கள் காரியத்திலும் நடத்த ஆரம்பித்து விட்டதால் மிக பெரியவர்கள் எல்லாம் இதை ஆதரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். சென்ற வாரம் குடி அரசில் பெண்களைப் பற்றிய வரை கூறும்போது, சமூகக் கட்டால் கஷ்டப்படும்பெண்கள்தங்கள்கஷ்டத்தை நிவர்த்தித்துக்கொள்ள விரும்பினால் வீட்டை விட்டு ஓடிப்போக வேண்டுமென்று கூறினேன். ஒன்றைப்பற்றி நன்கு சிந்தித்து அதன் லாப நஷ்டங்களை அனுபவ முறையிலும் சிந்தித்து பின் முடிவு செய்த பின் அதை அநுபவ முறையில் செய்து காட்ட பின் வாங்கக்கூடாது. காதல், காதல் என்று பேசப்படுகிறது, காதலைப்பற்றியும் அதை வளர்ப்பதைப்பற்றியும் நமது நாட்டில் உள்ள நூல்கள் அளவு கடந்ததாகும். ஆனால் காதல் என்பதில்லை. என்னை பொறுத்தளவில் கூறுகிறேன்; கலியாணமாகிய5-6வருடங்களுக்கு பின்பே எனது மனைவியுடன் நிர்ப்பயமாய் என்னால் பேச முடிந்தது.

கலியாண மென்பது, வேஷ்டி தோய்ப்பது போலவும், குளிப்பது போலவும், பல் விளக்குவது போலவும் இன்று கருதப்பட்டுவருகிறது. ஆனால், இந்த அளவுக்கு அற்பவத்தில் கலியாணத்தை நடத்துபவர்கள் செய்யும் ஆர்பாட்டம் மிக அதிகமாகும். 10-18பொருத்தங்களும், 1, 8, 9-வீடு கட்டிய ஜாதகங்களும் இவைகளுக்காக பாப்பானுக்கும் ஜாதகக்காரனுக்கும் கொடுக்கும் பணங்களும், இவைகளுக்கெல்லாம் செலவிடப்படும் காலம்,அறிவு இவைகளும் சொல்ல முடியாதெனவே யாகும். இத்தகைய மனிதத்தன்மையற்ற மணப்பான்மை தொலையவேண்டும்.

குருசாமி தனது திருமணத்தைப் பற்றி பேசும் போது கஷ்டமில்லை என்று சொன்னார். அது தவறு. அவருக்கு கலப்புமணம் நடத்தவேண்டும் என்ற செய்தி வெளிவந்ததிலிருந்து வந்த கஷ்டங்கள் சொல்லக்கூடியதல்ல கடைசியாக அவர் மணக்காலம் நெருங்க ஆரம்பித்ததும் அவரது டிரஸ்டி அவருக்கு சேரவேண்டிய இவ்வருட செல்வித்த பணம் அனுப்பாதிருக்குமாறு அவர் ஜாதியார்கள் தடுத்தார்கள். அவருக்கு நெருங்கிய பந்துக்களில் ஆண்களும்பெண்களும் பலர் சென்னைக்கு வந்து அவருக்கு இனியேற்படவிருக்கும் கஷ்டங்களை கூறினார்கள். அவரின் தங்கை கிணற்றிலிருந்து விழுந்துமிக அபாயநிலையில் இருப்பதாகவும் வந்தால் முக தரிசனம் கிடைக்குமென்றும். ஒரு தந்தி7தேதிஅவருக்குகிட்டியது இன்னும் வெளியில் சொல்லுதற்கில்லாத பல கஷ்டங்களுக்கு இடையிலேயே அவர் இத்திருமணத்தை நடத்திக் கொள்ள முடிவு செய்தார்.

அடுத்தபடியாக தனக்கு தனது சமூகத்தில்தக்கபடிப்பும்ஒத்தவயதும் உள்ள பெண் கிடைக்கவில்லை என்றார். அது தவறு. அவருக்கு 50ஆயிர ரூபாய்க்குமேல் சொத்துடன் ஒரு பெண் கிடைக்க இருந்தது. அதை அவர் விவாகம் செய்து கொண்டிருக்கலாம். பணத்துடன் ஓர் பெண் கட்டிவிட்டால்இவர்பின்ஒத்தவயது ஒத்தபடிப்பு இவைகளுக்காக கஷ்டப்படவேண்டியதில்லை.இதற்கு எத்தனையோ வழிகளுண்டு, இன்றைய ஜன சமூக வாழ்க்கையில் பெரும் தனவந்தர்களில் பலர் இதற்கு உதாரணபுருடர்களாகவும் விளங்குகிறார்கள்.ஒருநாடுசெபிக்கமற்றுவாழவேண்டுமானால் அந்நாட்டு மக்கள் ஒரே ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம். ஒழுக்கமென்பதோ! கற்பென்பதோ, ஆண் பெண் இருபாலருக்கும் சொந்தமானதேயன்றி பெண்களுக்குமட்டுமல்ல, இன்றைய சீர்கேடான நிலைக்கு பெண்மக்கள் மிருகங்களிலும் கேவலமாகக்கருதப்பட்டதும், ஆண்கள் பிள்ளைபெறும் இயந்திரங்களாக எண்ணப்பட்டதும், மனித ஜென்மத்துக்கும் பெண்களுக்கும் சம்பந்தமே இல்லையென ஆண்கள் மதித்துவந்ததும், இவைகளின் சவுகரியத்தினால் இவன் ஒழுக்கம் என்பதை விட்டு நாணயட்டத்தில் வெகு தூரம் விலகி அதற்கும் இவனுக்கும் சம்பந்தமில்லாது இன்று வாழ்வதே காரணமாகும். இவைகட்கெல்லாம் தெய்வீகம், மதக்கட்டளை என்ற விவாக முறைகள் இருந்ததே காரணமாகும். இன்று நடந்த கலியாணத்தில் பழைய பழக்க வழக்கங்கள் என்பது கூடுமானவரையில் அறவே நீக்கியே நடைபெற்றது. இதில் தெய்வீகத்துக்கு இடமில்லை. ஆனால், ஒழுக்கத்திற்கும் ஒத்த குடும்ப வாழ்க்கைக்கும் இதிலிடமுண்டு.

ஒரு கடவுளும், அதன் மதமும் அதை பின்பற்றும் மக்களை சரிசமமாக பாவிக்கவில்லையானால், அம்மதமும் அக்கடவுளும் யோக்கியமுடையதாக இருப்பதற்கில்லை, அதைச் சொல்லி பிழைப்பவர்களும், அதை நம்பி கட்டி அழுபவர்களும் கூட யோக்கியர்களாக இருப்பார்களா? இருக்க முடியுமா? என்பதை நீங்களே யோசித்து முடிவுசெய்யுங்கள். மற்றும் கலப்பு மணங்களும், விதவா மணங்களும் நாட்டில் வரவர மிக அதிகமாய் வருவதுபற்றியும், சாரதா சட்டத்தின் அவசியத்தை நன்குணர்ந்த பாப்பனர்கள் அது நல்லதேயானாலும் அதனால் இதுவரையில் சாத்திரத்தின்பேரால் ஏமாற்றிய மதப்புரட்டுக்கு ஆபத்து வந்துவிடுமே என்றபயத்தினால்தான் அதைஎதிர்க்கிறார்கள் என்றும் அரியவுரை நிகழ்த்தினார்.

## இராமநாதபுரம் ஜில்லா

### ஆதிதிராவிடர் 6-வது மகாநாடு

இம்மாதம் 12-12-29ல் இராமநாதபுரம் எஸ். பி. ஜி ஆதிதிராவிட புதுத்தெரு சங்க ஆபீஸ் காம்பவுண்டில் அலங்கரித்திருந்த சிங்கார பந்தலில் இம்மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. அன்று பகல் ஒரு மணிக்கு காட்சியை தங்கிய பிரின்ஸ்பால் வேல்ஸ் இளவரசர் பெருமானின் படம் இரட்டைக் குதிரைகள் பூட்டிய பீடனில் ஊர்வலம், அதர்வேட்டு, மேளவாத்தியம் விருதுகள் புடைசூழவும், விசுவாசமுள்ள ஆதிதிராவிட ஆண்கள், பெண்கள், ஏனைய கனவான்களும் மகாநாட்டுக்கென விஜயஞ் செய்திருந்த பிரதிநிதிகளோடு முன்னணியில் வெள்ளையானையின் உருவத்தில் யூனியன் கொடியுடனும், இராமநாதபுரம் டவுனிலும் வெளிப்பட்டணத்திலும் சுற்றுப் பிராகாரம் வெகு விமரிசையோடும் கான்ஸ்டேபிள்கள்

பந்தோபஸ்தோடும் 6 மணிவரை நடந்தேறியது.

திரும்பவும் 8-30 மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது. வெளியூர்களிலும் உள்ளூரிலுமிருந்து சில முக்கியஸ்தர்கள் அதாவது சிவவிப்பட்டணம் திரு சுப்பையா பிள்ளை ஹெட்மான் அவர்கள், சுவாமி பாலசுப்பிரமணியம், இராமநாதபுரம்ஹெட்மான, ராமசாமி அச்சமேந்தல், திரு. வேலுசாமித்தேவர் ஹெட்மான் அவர்கள், திருப்பத்தூர் ஆதிதிராவிட முன்னேற்ற மகாசபையின் காரியதரிசி கண்ணும்பிருப்பு, திரு. எம். ஆர். சந்தனம் அவர்களும், சிவகெங்கை மதுவிலக்குச் சங்க காரியதரிசி திரு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் டை சிவகெங்கை ஆதிதிராவிட சங்க காரியதரிசி திரு. பி. வேதமாணிக்கம் அவர்களும் இன்னும் சில முக்கியஸ்தர்களும் கிராமாந்திரங்களிலிருந்து ஆதிதிராவிடப்பிரதிநிதிகளும்பெண்மணிகளும் விஜயஞ் செய்திருந்தார்கள். அக்கிராசனம் வகிக்க கேட்டிருந்த ஐ. டி. சாமுவேல் எட்மாஸ்டர் அவர்களும், காரைக்குடி குமரன் ஆசிரியர் திரு. சொ. முருகப்பர் அவர்களும் வர சுணங்கிவிட்டதால், திரு டி. பொன்னையா செக்ரட்டேரியவர்கள் பாலசுப்பிரமணிய சுவாமிகளை சபையோருக்கு அறிமுகப்படுத்தி அக்கிராசனம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற் கிணங்கி தங்கள் ஆசனத்தில் அமர்ந்தார், ஏவதால் அவர்களால் கடவுள் வணக்கம் பாடியபின் அக்கிராசனர் முன்னுரை பின்வருமாறு:—

நான் இச்சபைக்கு தலைமைவகிக்க தகுதி யுடையவனல்ல. எனினும், இம்மகாநாட்டுக்கு தலைமைவகிக்கும் பாக்யம் உங்கள் சார்பாகக்கிடைத்ததற்காக நன்றி பாராட்டுகிறேன். எனக்குதேக அசௌகரியமில்லாதிருப்பினும்சிறிது எடுத்துரைப்பதற்குமுன் வந்துள்ளேன். பின்னால் என்னருகில் அமர்ந்திருக்கும் திரு. எஸ். கிருஷ்ணசாமிநாயுடு அவர்கள் தங்கள் சமூக முன்னேற்ற விஷயமாக எடுத்துக்கூறுவாரென தனது முகவுரையில் புகழ்வுரைத்தல் எனும் பொருட்பட தெளிவாகவும் உருக்கமாகவும் பேசி யமர்ந்தார்.

பின்னர் திரு. எம். ஆர். சந்தனம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு சில தீர்மானங்கள் நிறைவேறியதின் பின் திரு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எழுந்து தமது குல முன்னேற்ற மென்னும் பொருட்பட இன்சொல்லமையப்பெற்ற அரும்பெரும் விஷயங்களுடன் மதுபானத்தின் கேடால் வரும் இன்னல்களை வெகு எளியநடையில் தெளிவாக எடுத்துக் கூறி, பின்னும் பிரசாரகர் திரு. பி. வேதமாணிக்கம் அவர்களால் அரிய பெரிய விஷயமாய் எடுத்துப்பேசுவார் எனக்கூறியும் இம்மகாநாட்டின் சார்பாக என்னை வரவேற்று இதுவரை யான் பேசியவைகளை மன நிம்மதியோடு கேட்டிருந்ததற்காகவும் நன்றிபாராட்டுகிறேன். தங்கள் சமூகங்கள் கிராமங்கள் தோறும் தாலூக்காக்களிலும் சங்கங்கள் அமைத்துக்கொள்வது நலமென்றும், திரு. ராமச்சந்திரம் அவர்கள் தோழமக்களின் பால் செலுத்திவரும் அன்பின் பெருக்கைப்பற்றியும் வெகு தெளிவாக எடுத்துக் கூறியமர்ந்தார்.

பிரசாரகர் திரு. பி. வேதமாணிக்கம் அவர்கள் இளமையின் கல்வி என்னும் பொருள்பட மேற்கண்டபடி குடியின் கேடு என்னும் தலைப்பின் கீழ் அநேக பாடல்கள் மூலமாகவும் கதைகளின் மூலமாகவும் பேசியமர்ந்தார்.

திரு வேலுச்சாமித்தேவர் அவர்கள் முன் பேசியவைகளை தழுவி ஒற்றுமை எனும் பொருட்பட இன்சொல்லமைந்த இனியகுரலோடு வெகு தெளிவாகப் பேசியமர்ந்தார்.

தலைவரின் முடிவுரையில் சங்கம் செக்ரட்டேரி திரு. டி. பொன்னையா அவர்கள் சனசமூகத்தின் ஒவ்வொரு கிராமாந்திரங்களின் ஏழைகளை மேல்வகுப்பினர் என்போர் செய்துவந்த ஆட்டூழியங்களை மிகவும் தெளிவாகவும் உருக்கமாகவும் எடுத்துச்சொல்லி தலைவருக்கும் முக்கியஸ்தர்களுக்கும் ஆரங்கள் சூட்டப்பட்டு வந்தனோபசாரத்தோடும் கடவுள் வணக்கம் ராஜவாழ்த்தோடும் இனிது முடிவுற்றதென ஆதிதிராவிட பிரதிநிதி ஒருவர் எழுதுகிறார்.

## தீர்மானங்கள்

மாட்சிமைதங்கிய மேதகு சக்ரவர்த்தி பெருமானவர்கள் வியாதியினின்று சுகமடைந்ததற்காக எல்லாம் வல்ல கடவுளுக்கு இம்மகாநாடு துதிசெலுத்துகிறது.

தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதும் இவ்வேழைகளுக்கு பெரும்பாலும் இதுவரைசெய்திருக்கும் நன்மைகளுக்காக இம்மகாநாடு நன்றி செலுத்துவதோடு இனியும் இந்த ஏழை ஆதிதிராவிடர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்க வேணுமாய் இம்மகாநாடு வணக்கமாய் காருண்ய கவர்ன்மெண்டை கேட்டுக்கொள்ளுகிறது.

சென்னை சட்டசபையில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக 10 ஸ்தானங்கள் கொடுத்தும் டெல்லி அசம்பளி ஸ்தானத்திற்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1 ஸ்தானம் கொடுத்திருப்பதற்கும் இம்மகாநாடு நன்றி செலுத்துவதோடு இனிவரும் தேர்தல்களில் ஜில்லா போர்டு தாலூகா போர்டு, யூனியன்போர்டு, பஞ்சாயத்துக்கோர்ட்டு, பெஞ்சு கோர்ட்டுகளிலும் தாராளமாக ஆதிதிராவிடர்களை மெம்பர்களாக எடுத்துக்கொள்ள வேணுமாய் காருண்ய கவர்ன்மெண்டை இம்மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறது.

ஒவ்வொரு கிராமாந்தரங்களிலும் இலவசக்கட்டாயக் கல்வியும் கைத்தொழில் சாலையும் ஏற்பாடுசெய்து கொடுக்க வேணுமாயும், ஏழை ஆதிதிராவிடமாணவர் மாணவிகளுக்கும் புத்தகம் சிலேட்டுகள் கொடுத்தும், தொழில்செய்யுமேழைகளுக்கு இராப்பாடசாலையும் திறவி கொடுக்கவேணுமாயும், ஒவ்வொரு கிராமப்பாடசாலையில் ஆதிதிராவிடப்பிள்ளைகளை பெஞ்சில் இருக்கக்கூடாதென்றும் பாடசாலையில் இதரப்பிள்ளைகளோடு கலந்திருக்கலாகாதென்று பிரித்து வெளியே வைத்திருக்கிறார்கள். அப்படிக்கில்லாமல் சமமாக அந்தந்த டிப்பார்ட்மெண்டு ஸ்கூலுக்கு அந்த அந்த ஆபீஸர்கள் கவனித்து சமமாக நடத்தும்படி ஏற்பாடு செய்ய வேணுமாய் டிப்பார்ட்மெண்டு ஆபீஸர்களையும் காருண்ய கவர்ன்மெண்டாரவர்களையும் இம்மகாநாடு வணக்கமாய்க்கேட்டுக்கொள்ளுகிறது.

பிரரேபித்தவர் எம். ஆர். சந்தனம், கண்ணும்பிருப்பு ஆமோதித்தவர். ம. கண்ணப்பா அவர்களால்இராமநாதபுரம் ஆதிதிராவிடர்களின் நிலங்களை அநேகர் மிரட்டி எடுத்துக் கொண்டு இப்போது அநேகஏழைகள் பிழைக்க வகையில்லாமலும் மேற்படியார்களிடமிருந்து மீறி எடுப்பதற்கும் வழக்குச் செய்து ஜெயித்து எடுக்கவும் சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். எக்காரணமும் இல்லாமல் அபகரித்து எடுத்தும் அநேகர்கள் இடம் வெகுகாலத்தின் பட்டாக்களுமிருக்கிறது. இவைகளை நன்றாய் சோதனைசெய்து சுவாதீனக்காரர்களுக்கே நிலங்களை வசபண் செய்துவிட வேணுமாயும் வேண்டிய ஏற்பாடு செய்ய வேணுமாயும் காருண்யகவர்ன்மெண்டாரை இம்மகாநாடு வணக்கமாய் கேட்டுக் கொள்ளுகிறது. பிரரேபித்தவர் எம். பொன்னையா; ஆமோதித்தவை மஹா ஜனங்களால். ஆதிதிராவிடர்கள் மக்கள் கட்டிடம் இல்லாமல் சிரமப்படும் ஏழைகளின் மீது கருணைபுரிந்து இடம் கொடுத்து ஆதரிக்க வேணுமாய் கவர்ன்மெண்டை இம்மகாநாடு வணக்கமாய் கேட்டுக்கொள்கிறது.

இம்மகாநாடு இறந்த பிராணிகளின் மாமிசம் சாப்பிடக்கூடாதென ஆதிதிராவிட சமூகத்தாரைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பிரரேபித்தவர் பொன்னையா; ஆமோதித்தவர் எஸ். தாஸ் இராமநாதபுரம்.

ஆதிதிராவிடரின் சமூகத்தாரின் சார்பாக ஜில்லாவிலும் ஒவ்வொரு தாலூகாவிலும் கிராமாந்திரங்களிலும் ஆதிதிராவிட சங்கங்கள் ஸ்தாபனம் செய்து அதற்குவேண்டிய முயற்சிகள் பண உதவிகள் செய்துகொடுக்கவேணுமாய் நமது ஜனசமூகத்தாரையும் ஜில்லா செக்ரிட்டேரியும் உதவிசெய்ய வேணுமாய் இம்மகாநாடு ஜனசமூகத்தைக்கேட்டுக்கொள்ளுகிறது.

பிரரேபித்தவர் எஸ். தாஸ் இராமநாதபுரம், ஆமோதித்தவர் பி வேதமாணிக்கம் சிவகெங்கை.

மதுபானத்தின் கேடுதல்களைக் கண்டித்து இந்த தீய ஆபாசத்தை அடியோடு விலக்கிவிட வேண்டுமென்றும், இதற்காக ஏற்பட்டிருக்கும் கமிட்டியின் சார்பாக வரும் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய உதவி புரியவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது. பிரரேபித்தவர் பி. வேதமாணிக்கம், சிவகங்கை, ஆமோதித்தவர் வீ. வேலுச்சாமிதேவர் இராமநாதபுரம் சிவகெங்கை இவ்விரண்டு ஜமீனில் நஞ்சை புஞ்சைகளில் இருக்க இடமில்லாத ஆதிதிராவிடர்கள் குடியிருப்புக்குக் கட்டிக்கொள்வதென்றால் அதற்குசர் சமஸ்தானத்தில் கேட்கப்படுவதினிமித்தம் ஏழைகளாகிய ஆதிதிராவிடர்களுக்கு கஷ்டத்தைக்கொடுக்கிறது. வரியில்லாமல் குடியிருப்புக்கட்டிக் கொள்ளும்படி உத்திரவாக வேணுமாய் காருண்ய கவர்ன்மெண்டாரையும் சமஸ்தானத்தையும் இம்மகாநாடு வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறது.

பிரரேபித்தவர் எம். பொன்னையா; ஆமோதித்தவை மகாஜனங்களால். நாட்டுப்புறங்களிலிருக்கும் ஏழை ஆதிதிராவிட குடிகளுக்கு வீட்டு வரி ஏற்படுத்தி இருப்பதை ரத்துச்செய்யவேணுமாய் காருண்ய கவர்ன்மெண்டாரையும் யூனியன் போர்டாரையும் இம்மகாநாடுவணக்கமாய்க்கேட்டுக்கொள்கிறது.

பொம்பாய் ஜரிகை சேலைகள்

எங்களிடம் 10, 12, 14, 16, 18, முழங்களில் பலவிதமான ஜரிகை வேலைசெய்த புதுமாதிரியான பியாஸ்லி வாயில் சேலைகளும் அசல் சில்க் சேலைகளும், வெல்வெட்டிலும் பேரிலும், சில்க்போரிலும் ஜரிகைவேலைசெய்த, ரவிக்கைகளும், ஜாகீட்களும், பிராக்குகளும், குறைவு விலைமுதல் ஒவ்வொருவிலையிலும் கிடைக்கும். மொத்தமாயும் சில்லரையிலும், வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பப்படும். வேண்டியதற்கு உடனே எழுதுங்கள். கடிதங்கள் தமிழிலும் எழுதலாம்.

பி. கே, பாலசுந்திரம்நாயுடு அண்டு கோ.,
கோபால்புவன் பிரின்ஸஸ் தெரு,
தந்தி—'மகாவிஷ்ணு' பம்பாய் 2.

# ஆலய நுழைவு

(குடியரசு, திராவிடன், துணையாசிரியன் திரிசிரபுரம் ஆ. நடராஜன்)

ஆலய நுழைவைப்பற்றி நாம் எத்துணை கூறினும் அத்துணையும் அவசியமாகின்றது. இதில் உள்ள மனக் கொதிப்பும், ஆர்வமும், உணர்ச்சியும், பரபரப்பும் சமூக சீர்திருத்தத்தில் வேறெத்துறையிலும் இல்லை. ஆலய நுழைவில் உள்ள நுட்பங்களைக் கவனிப்பாம்:—ஆலய நுழைவு விரும்புபவர்கள் பெரும்பான்மையாக 'தீண்டத்தகாதவர்'களே யாவர். என் இவர்கட்கு நுழைவு அளிக்கப்படவில்லை யெனின், இவர்கள் தாம் சாதி வேற்றுமைக் கற்பனையில் இழிவான நிலைமையை அளிக்கப் பெற்றவர். இவ்வேற்றுமை உதித்தது எவ்வனமெனில், இது வருணாச்சிரமதருமம் என்னும் பார்ப்பன மதத்தில் விளைந்தது. இம்மதந்தான் ஆரிய-திராவிடப் போராட்டத்தில் ஆரியக் கற்பனையாம். எனவே ஆலய நுழைவில் முதலாவது சாதி வேற்றுமை, இரண்டாவது மதவேற்றுமை, மூன்றாவது மக்கள் பிரிவு வேற்றுமை இவைகள் எல்லாம்பொதிந்து நிற்கின்றன. ஆலய நுழைவு 'தீண்டத்தகாதவர்'கட்கு அளிக்கப்படுமாயின், அதன் வாயிலாய் ஒருவகை சமநோக்கம் நிலவி, உயர்வு தாழ்வெல்லாம் தட்டழிந்துபோம். அதனோடன்றி, இதில் பல நுட்பங்கள் ஒன்றிக்கொன்று பின்னி நிற்கின்றனவாதலால்தான், ஆலய நுழைவில் இத்துணை பரபரப்பும் உணர்ச்சியும் மனக் கொதிப்பும்; 'தீண்டத்தகாதவர்'கள் நீங்கிய பார்ப்பனரல்லாத பிற சாதியினரும் இதில் 'தீண்டத் தகாதவர்'களுடன் ஒன்றுபட்டு ஒத்துழைக்கின்றனர். 'தீண்டத் தகாதவர்'கட்கே முற்றிலும் உரித்தாகிய இத்துறையில் பிற மக்களும இறங்கியிருத்தல், இதனால் சாதி வேற்றுமையிலும் ஓர் வல்லிடி விழும் என்பதுபற்றியே அன்றி வேறெக் காரணம் பற்றியுமில்லை. எனவே, ஆலய நுழைவில் சமநோக்கம் ஏற்பட்டால் இவ்விந்தியாவில், இந்துக்களிடை ஒரு வகையில் மிகவும் பாராட்டத்தக்க ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்பது உறுதி. இதனை ஆராய்வாம்.

ஆலயம் என்பது என்னவென்று உரையறை கூறும்படி 'இந்து' மதக்காரர்களைக் கடாவுவோமாயின்: அவர்கள் ஆலயம் என்பது ஈசன் (கடவுள்) இருப்பிடம் என்கின்றனர். எல்லா இடங்களிலும், ஈசன் இருப்பதாக, கல்லிலும் தூணிலும், சாக்கடையிலும் சமுத்திரத்திலும், அண்டத்திலும் பிண்டத்திலும் நீக்கமற நிறைந்திருப்பதாய்க் கூறுகின்றீர்களே, ஈசனுக்கு ஒரு இருப்பிடமும் உண்டோ என்று வினவியக்கால், உடனே சற்று தம் சித்தத்தை சீர்படுத்திக்கொண்டு ஈசன் எங்கும் உள்ளவர்தான்; ஆனால் அதனை அறிய மானிடர்க்குச் சக்தி வாய்க்கும்வரையில், ஒரு விசேட இடத்தைக் கற்பித்து, அங்கு அவர் இருப்பதாக மனதில் நினைத்து, அந்த இடத்தைத் தொழுதல் ஒரு உபாயம், இது உபாய மார்க்கம் என்கின்றனர். சிலர் 'அண்டலாயம், பிண்டலாயம், பிரதிட்டாலயம் எனும் பிரிவுகளில் ஆலயம் பிரதிட்டாலயத்தின் பிரிவாகும். இதில் ஈசனிருக்கின்றார். நீர்மேல் மட்டம் சமமாக குறிப்பிட்ட இடத்தில் தங்கி நின்றாலும், அடியில் குண்டு குழிகள் இருப்பின் குழியிலிருந்து மேல்மட்டம் வரை உள்ள நீர்ப்பகுதி அதிகமாகவே இருப்பதுபோல், பிரதிட்டாலயங்களில் ஈசன் விசேடத்துவம் பெற்றுளார் என்கின்றனர். தத்துவார்த்தமும், சாமர்த்தியப் பேச்சும் எவ்வாறிருப்பினும் இவைகளையும் நாம் ஆராயக்கடமைப்பட்டுள்ளோம். நீக்கமற நிறைந்த ஒரு பொருள், ஓரித்தைத் தடித்தும், ஓரிடத்து மெலிந்தும் இருக்கக்கூடுமாயின் அது நீக்கமற நிறையும் சக்தியை உடையதன்று. தடித்தலினும் மெலிதலினும் தடிப்பிற்கு முன்னும், மெலிதற்குமுன்னும் ஆதாரமாக இடம் அதற்கு வேண்டியிருத்தலால், அம்மூன்றும் இடம் சூனியமாகவே அவசியம் இருக்க வேண்டுமாதலால், நீக்கமற நிறைவதெப்படி? ஆதலின் ஓரிடத்தில் விசேடத்துவம் பெற்றுத் தடிப்பெய்து இருத்தல் பொருந்தாக் கூற்றே. இனி ஒரு சாரார் நீக்கமற நிறைதல் உண்மையே. பிரதிட்டாலயங்களில் மனிதன் கொடுத்த விசேடத்துவமே தவிர அங்கு ஈச வியாபகத்தில் வேற்றுமையில்லையென்றும் கூறுவதை ஆராயும் போது, பிரதிட்டாலயங்கள் மானுடக் கற்பனையே என்று மதக்காரர்கள் ஒப்புக்கொள்ளுவது இதனால் வலியுறுத்தப்பெறுவது காண்கின்றோம். எனவே, தடிப்பதும் மலிதலும் என்ற கூற்று பொய்ப்படுகின்றது. மானுடக் கற்பனை என்பது மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆதலின் கோயிலில் கடவுள் இருக்கின்றார். என்பது கலப்பில்லாத கற்பனை; கற்பனையாதலின் பொய்; பொய்யாகிய இக்கோயில்களை மெய்போல எடுத்துக் காண்பித்து, அதன்மீது ஒரு பெரிய மகத்துவத்தையும் சுமத்தி, அம்மகத்துவத்திற்கு ஒரு பிரிவினர் நிறைந்த அளவிலும், ஒரு பிரிவினர் பகுதி அளவிலும், அதிகாரம் பெற்றவர்கள் என்றும், ஒரு பிரிவினர் இதற்கு அதிகாரிகளே அல்லரென்றும் கூறிக்கொண்டு திரியும் பார்ப்பனக் கூற்றால், இவ்விந்தியாவும் அதன் அருமை மக்களும் அடையும் இடைஞ்சல்கள் ஒரு படித்தானவையல்ல. பார்ப்பனர்கள் தமிழ்மக்கள் நாகரிகத்தை அழித்து, தமிழ்நாட்டில் அரசியல், அறிவியல், சமூக இயல் இவைகளில் புரிந்தபடு சூழ்ச்சிகளில் கோயில் என்பது ஒன்று. எவ்வாற்றாலும் தன்ன முடியாத தமிழ் மக்களை தட்டிக் கொடுத்து அப்பார்ப்பனர்கள் அவர்களை 'இந்து'க்களாக ஒரு அளவில் (சூத்திரராக) ஏற்றுக் கொண்டனர். தன்னக்கூடிய, அதாவது அக்காலத்தில் அரசியல் வலிமையில் சிறிது குன்றியிருந்தஒரு பெரும் பகுதியை அவர்கள் பள்ளர், பறையர், என்று ஒதுக்கி அவர்களை தீண்டத்தகாரியராய்ச் செய்தனர். தமிழ் மக்கட்கே உரித்தாயிருந்த இயதத்துவங்களை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்த்து அம்மொழிபெயர்ப்பு நூல்களிலும் தம் (ஆரியரின்) சொந்தத் தத்துவங்களை முற்றும் பகைமையை மயங்கிய போன்று கலந்து, அவைகட்கு 'உபநிடதங்கள்' என்னும் சமஸ்கிருதப் பேரையும் சூட்டி, அவைகள் தம் இருடிகளே தொகுத்தனர் என்றும் விளம்பரம் புரிந்து, அக்கலப்பு நூல்களை மீண்டும் 'இந்த'க்களாக மாறிய தமிழர்கட்பால் மாறிவிட்டனர். இவ்வாறுவே மருத்துவ நூல்களையும் திருடிச் சென்று அவைகளைத் தொகுத்து ஆயுர்வேதம் என்றும் சித்த நூற்கள் என்றும் வெளியிட்டனர். பிறதுறைகளிலும் இதே முறையை இவர்கள் கையாண்டு, சொற்பகாலத்தில் தமிழர்களின் நாகரித்தையும், மதத்தையும், அறிவையும், பெருமையையும் அழித்தே விட்டனர்.


எனவே, தமிழர்களை அடிமைப்படுத்தியதற்குச் சான்று இப்பொழுதுள்ள 'இந்து' சாத்திரங்களும் ஆகமங்களும் அவ்வாகமக் கோயில்களுமேயாம். கோயிலில் தெய்வம் குடிகொண்டுள்ளது என்பது பொய் என்று முன்னர் நாம் மெய்ப்பித்தாம். ஆனால், அதில் நுழைவது எற்றுக்கு என்பார் கூறுதும். தமிழர்நாகரிகம் முற்றிலும் மீட்கப்படாதவகையில்பார்ப்பனரால் அழிந்தே போயிற்று என்பதற்கு நம் மறுத்துரை கூறாதலின் பயனில்லை. இப்பொழுது நம்மிடை உலவுகின்ற நாகரிகம், மதம், ஒழுக்கம் இவைகளில் பெரும்பாலும் ஆரியப்போக்கே உளது. சென்றதை நினைந்து வருந்தி, அதனை உயிர்மீட்கத் துணிவது இப்பொழுதுள்ள நிலைமையில் அதுவீண் செயலாகும் உள்ளதைக்கொண்டு கடைத்தேறுதலே சிறிய வழியாம். ஆதலின், கோயில்களில் கடவுள்(ள்?) இருக்கின்றார் என்றும், கடவுள் பொது வென்றும், இந்துக்களுக்கே அக்கோயில்கள் பொதுவாக உள்ளன வென்றும், பார்ப்பனரும், பார்ப்பன ஆகமங்களும் கூற நாம் கேட்டு வருகின்றோம். வாயளவில், பழந்தமிழ்ப்பெருங்குல மக்களாய 'தீண்டத்தகாதவர்'களையும் இப்பார்ப்பனர்கள் இந்துக்கள் என்று கூறுகின்றார்கள். இந்துக்கள் என்னும் பதம், மதத்தின் காரணப் பெயராதலின் அம்மதந்தான் தீண்டத்தகாதார் உட்படபார்ப்பனர் வரைக்கும் பொதுவாதலின், அம்மதத்தின் கோயில்களில் இந்துக்களாய தீண்டத்தகாதவர்கட்கு ஏன் உரிமை இல்லை என்பதுவே கேள்வி. கோயில்களில் உள்ள கடவுள்களின் கருணையில் ஒருவருக்கும் ஏபரப்பில்லை உரிமை உண்டா, இல்லையா? உரிமை இல்லையென்றால் நாங்கள் இந்துக்கள் அல்லவா? "உரிமை உண்டு இல்லை என்பதற்கும் பார்ப்பனர்கள் அண்ணாவிகளா?", என்பவைதான் ஆலய நுழைவினைத் தூண்டும் விஷயங்களாய் இருக்கின்றனவே தவிர, சிலர் கருதுமாற்றம், கடவுள் பக்தியில் பழம்போல் பழுத்துக் கனிபோல் கனிந்து, அழுதழுது கோயில்களை வேண்டுவது இங்கு எழவில்லை. ஆலய நுழைவு நுட்பம் உரிமையில் நிற்கின்றது. உரிமைக்கு எம்மனிதனும் உயிர்போம் அளவிலும் முயற்சித்தல் இயற்கை—அவ்வுரிமை அற்பமெனினும். எனவே, ஆலய நுழைவைப்பற்றி, 'தீண்டத்தகாதார்' தமது உரிமையினைப் பெற வேண்டியது அவசியத்திலும் அவசியமே. பார்ப்பனரல்லாதார் ஆட்சிபுரிந்த கோயில்களில் பார்ப்பனர் தவ்வுரிமைக்கு ஊறு விளைக்க முன்னிற்பரேல், அவர்கட்கு நம்மு தமிழ் மக்கள் வங்காளக் குடாக்கடலைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். கரும் பார்ப்பனரை வெள்ளைப் பார்ப்பனர் 'நீதி' என்னும் பேரால் சார்பு செய்வர் எனில், அவர்கட்கும் நாம் அரபிக் கடலைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். தமிழ்நாட்டில் தமிழருக்குள்ள உரிமையைக் கொடேன் என மறுக்க யவர் முன்னிற்பினும் முன்னிற்க; காலமுயற்சியை மேற்கொண்டு விடாது ஒரு நூலுப் போராடுவோமாயின் வெற்றிநம்மாதாகுமென்பது திண்ணம். கோயில்கள் நம் கைக்கு மாசு பின்பு, அவைகளை யங் செய்வது, எந்த அளவில் பாராட்டுவது என்பதைப்பின்னர்கருதுவாம்.

## சந்திர-கமலா அல்லது சுயமரியாதையின் வெற்றி

திராவிடன் குடியரசு துணையாசிரியர் திரிசிரபுரம் ஆ. நடராஜன் அவர்கள் இயற்றிய இச் சமூக சீர்திருத்த நாடகத்தை திருச்சி முருகானந்த சபையார் மதுரையில் மேலமாசி வீதி நர்த்தனகான சாலா கொட்டகையில் 28-12-29 சனிக்கிழமை அன்றிரவு 9-30 மணிக்கு அதிவிமரிசையாய் நடாத்துவார்கள்.

இந்நாடகம் இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவர் உயர்திருவாளர் சௌந்திர பாண்டியம் எம். எல். சி., அவர்கள் ஆதரவில் நடைபெறும்.

டி. பி. மாணிக்கவாசகம்,
ஆர். நாகராஜன்,
கௌரவ காரியதரிசிகள்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
செற்றமும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே"


# குடி அரசு

சென்னை 1929 டிசம்பர் 22உ


## "தீண்டப்படாதார்"கள் நிலைமை

"இந்து மதத்தில்" தீண்டப் படாதவர்கள் என்பவர்களின் பரிதாபகரமான நிலைமையைப் பற்றி நாம் அடிக்கடி எழுதி வந்திருக்கிறோம். இன்றைய தினம் நமது நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது கேவலமான நிலையை உணர்ந்து தாங்கள் பார்க்கக் கூடாதவர்களாகவும், நெருங்கக் கூடாதவர்களாகவும், தொடக் கூடாதவர்களாகவும், இந்த "இந்திய" மக்களால் ஒதுக்கிவைக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் வருவதிலிருந்து தங்களை மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். சமீபத்தில் பூனாவில் கோயில் பிரவேசம் சம்பந்தமான சத்தியாக்கிரகம் நடைபெற்று அதன் வேகம் இன்னும் குறையாமல் அவ்விடத்திய மக்களது உணர்ச்சியைத் தட்டி யெழுப்பியிருக்கிறது. வட இந்தியாவில் காசி முதலிய பல இடங்களிலும் இதே மாதிரியாக தாழ்த்தப்பட்டவர்களின் கிளர்ச்சி அதிகமாகும் அடையாளங்களும் காணப்படுகின்றன. தென் இந்தியாவில், அதிலும் முக்கியமாக தமிழ் நாட்டில் நமது சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்து வேரூன்றிய சில வருஷங்களுக்குள்ளாகவே, சிறிது காலமாக, தாழ்த்தப்பட்ட மக்கள் வீதியில் பொது ஜனங்களுக்கு சிறிது வழி ஏற்பட்டிருப்பதோடல்லாமல் அவர்களுக்கும் தங்கள் கேவலமான நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசையும் உண்டாயிருக்கிறது.

"தீண்டாதார்" விஷயத்தில் சைவர்கள் என்போர்களும் வைஷ்ணவர்கள் என்போர்களும் இதுகாறும் மக்களை ஏமாற்றி நந்தனார் கதையையும், திருப்பாணாழ்வார் கதையையும் மாத்திரம் காண்பித்து விட்டுத் தப்பித்துக் கொண்டது போல் இனிசெய்ய முடியாதென்பதையும் நன்கு உணர்ந்து கொண்டார்கள். மேலும் ஆதிதிராவிடர்களும் ஏனைய தாழ்த்தப்பட்ட மக்களும் அவரவர்கள் சமூக மகாநாடுகள் கூடி தங்களது அபிவிருத்திக்குவேண்டிய ஏற்பாடுகளையும் செய்து கொண்டே வருகிறார்கள். ஆகவே, தற்போது தமிழ் நாட்டிலும் சிதம்பரம், ஈரோடு, விழுப்புரம் திருச்சி போன்ற இடங்களில் கோயில் நுழைவு சம்பந்தமான கிளர்ச்சிகளோ அல்லது உணர்ச்சியோ நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அறிகிறோம். திருவாங்கூர் சமஸ்தானத்திலும் தீண்டப்படாதார் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் லட்சக் கணக்கான "ஈழுவர்களும்" "புலையர்களும்" கோயில் நுழைவு சம்பந்தமாக மிகப் பிடிவாதமான கிளர்ச்சிகள் செய்து கொண்டு வருவதாகவும் அறிகிறோம். இவர்களுடைய கிளர்ச்சிகள் முழுதும் வெற்றி பெறுவதும் இல்லாததும், வேறு விஷயமானாலும், இவர்களது முயற்சியின் தத்துவத்தை கூர்ந்து கவனிப்போருக்கு நமது "இந்து மதத்திற்கு" முடிவு காலம் நிர்ணயிக்கக் கூடிய சந்தர்ப்பம் நெருங்கிக்கொண்டு வருகிறது என்பதை மாத்திரம் யாரும் மறுக்க முடியாது.

கோயில் நுழைவு சம்பந்தமாக நமது அபிப்பிராயத்தை அடிக்கடி தெரிவித்திருக்கிறோம். "தீண்டப்படாதவர்கள்" கோயிலுக்குள் போய் விடுவதால் உடனே அவர்களுக்கு "மோட்சமோ" அல்லது "கடவுள் அநுக்கிரகமோ" கிட்டி விடும் என்பதல்ல. பின் என்ன வெனில், கோயில்களில் தான் நமது கடவுள்கள் என்பவைகள் வசிப்பதாக "இந்து மதம்" கூறுகிறது. அந்த நாள் நடவடிக்கையிலும் மக்கள் சொல்லிக்கொண்டிருப்பதையும் பார்க்கிறோம். "தீண்டப்படாதவர்கள்" கோயிலுக்குள் நுழைவதாலோ, அல்லது "கடவுளர்களின்" சிலைகளின் பக்கத்தில் போவதாலோ, அந்தக் "கடவுள்கள்" செத்துப் போகுமென்றும், அதனால் "இந்து மதத்"திற்கே அழிவு வந்து விடுமென்றும் கூக்குரல் போடுகின்ற சனாதன தர்மக் கூட்டத்தார்களுக்கும், சைவக் கூட்டத்தார்களுக்கும், வைஷ்ணவக் கூட்டத்தார்களுக்கும், அவ்விதம் அது உண்மையானால் அத்தகைய லேசான உயிரை வைத்துக்கொண்டிருக்கிற "கடவுள்கள்" இருப்பதைவிட ஒழிந்து போவதே நலம் என்பதையும், இதைப்பொறுக்க முடியாத "இந்து மதமும்" இருப்பதை விட அழிவதே மேல் எனவும் நிரூபித்துக் காண்பிக்க வேண்டியே இந்தக் கோயில் நுழைவு இயக்கம்தோன்றியிருக்கிறது என்றுசொல்வோம். இதர பொது இடங்களைவிட கோயில்களை முக்கியமாக எடுத்துக்கொண்ட கருத்தின் உண்மையை இது சமயம் வெளியிட்டு விடவேண்டுமென்று நினைக்கிறோம், தாழ்த்தப்பட்டவர்கள், "இந்து மத"க்கோயில்களுக்குள் செல்ல உத்தேசிப்பது "கடவுள்" மேலிருக்கும் பக்திப்பெருக்கினால் அல்ல என்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஏனெனில், அவரவர்களை அடிமைப்படுத்துவதற்கும், அவரவர்கள் பகுத்தறிவை உபயோகத்திலிருந்து தடுப்பதற்கும் போதுமான "கடவுள்களும்", தரகர்களும், பூசாரிகளும், அவரவர்கள் சமூகத்திலேயே போதுமானவரையில் இருப்பதால் மேலும் நம்முடைய "கடவுள்களும்" தரகர்களும் வந்து தான் அவர்களை விடுவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை, அல்லது அவர்களது "கடவுள்களுக்கு" இருக்கும் சக்தியை விட நமது "கடவுள்களுக்கு" அதிகமாக இருக்கிறது என்ற நம்பிக்கையுமல்ல. பின் என்ன வெனில், கோயில்கள் தான், நமது தேசத்தில் சாதிப் பிரிவையும் சமயப்பிரிவையும் உண்டாக்குவதற்குக் காரணமாயிருந்தன வென்பதற்கும், இன்னும் அவைகள் தான் காரணமாயிருக்கின்றன வென்பதற்கும் அத்தாட்சிகள் தேடவேண்டிய அவசியமில்லை. சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பொது இடங்களாகிய தபால் ஆபீஸ், ரயில்வே ஸ்டேஷன், கோர்ட்டுகள் முதலானவைகள் எப்படி 'தீண்டப்படாத' மக்களை ஒன்றுபடுத்த உபயோகப்படுகின்றனவோ அதேபோல், 'இந்து மதத்தினரால்' ஏற்படுத்தப்பட்ட கோயில்களும், சத்திரங்களும், தீர்த்தங்களும், மற்றவைகளும் தான் தீண்டாமையை நிலை நிறுத்தவும் அதிகப் படுத்தவும் உபயோகப்பட்டு வருகின்றன. ஆதலால்தான் இதர பொது இடங்களைவிட கோயில்களிலேயே முதன் முதல் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது உரிமையை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று கருதுகின்றோம்.

அதுவுமன்றி, பார்ப்பனப் புரட்டை அப்படியே கண்ணுக்கெதிராகக் காட்டக் கூடியது கோயில்களே என்பது நமது அபிப்பிராயம். எப்படியெனில், எங்கோ மூலையில் கிடக்கும் கல்லை எடுத்து வந்து உருவமாக்கி, அதை நட்டுவைத்து, அதற்கு மந்திரம் மூலமாக உயிர் உண்டாக்கி வெறும் கல்லை 'கடவுளாக்'கக் கூடிய சக்தியானது, ஆறறிவுடைய மக்களின் ஒரு பெரும் பகுதியாரை, அவர்களுடைய தீண்டப்படாத தன்மையிலிருந்து விலக்கி இதர மக்களோடு சமமாகச் சேர்க்க முடியவில்லை யென்றால், அந்த சக்தியோ, அல்லது மந்திரமோ எவ்வளவு தூரம் புரட்டு என்பதும், இந்த அயோக்கியத்தனமான புரட்டு எத்தனை ஆயிர வருஷங்களாக நமது நாட்டில் கேட்பாரில்லாமல் நடந்து வந்திருக்கிறதென்பதும் பொது ஜனங்களுக்கு நன்கு விளங்கும். இன்னும், கடவுள் என்பதற்கும், அதை வணங்குபவனுக்கும் மத்தியில் தரகர்கள் இருந்து கொண்டு பாமர மக்களை ஏமாற்றிப் பணம்பறித்து சோம்பேறித் தனமாக வயிறு வளர்த்துவரும் கூட்டத்தாரினுடைய சூழ்ச்சிகளும் கோயில் நுழைவு மூலியமாய் பொது ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சமாக விளங்கிவிடும் என்பதும் நமது கடைசி முடிவு. மேலும் "இந்து" மதமானது ஆதிமுதல் இதுவரையில் சாதிப் பாகுபாட்டின்மீதே நடைபெற்று வருகிறது என்பதையும் நிரூபிக்க வேண்டிய காலமும் கிட்டிவிட்டது. சாதியையும், சில்லரை சமயப்பிரிவுகளையும் அடிப்படையாகக்கொண்ட 'இந்து, மதமானது சாதிவேரையும், பார்ப்பனிய வேரையும் வெட்ட ஆரம்பித்தவுடனேயே உச்சியிலிருக்கும் இலை, தழைகளோடு அடியோடும் சேர்ந்து ஆட்டங்காண ஆரம்பிக்கும் காட்சியையும் மக்கள் காணவேண்டிய காலமும் கிட்டிவிட்டது, இன்னும் 'ஸ்ரீராமாநுஜர் சகல ஜாதியாரையும் ஒன்றுபடுத்தியதும் திருப்பாணாழ்வாரை வணங்கக்கூடியதுமான எங்கள் வைஷ்ணமதத்தில் தீண்டாமை வித்தியாசம் கிடையாது. அது மிகவும் உயர்ந்தது" என்று வாய் வேதாந்தம் பேசி தப்பித்துக் கொண்டு வந்த வைஷ்ணவர்களும், "நந்தனுக்கு மோட்சம் கொடுத்ததும் அவரையும் 63 நாயன்மார்களுள் ஒருவராய் வணங்கி வருவதுமாகிய எங்கள் சைவ மதத்தில் 'தீண்டாமை வித்தியாசம் கிடையாது" என்று வீணாய் கிட்டல் மிரட்டி ஏமாற்றிவந்த சைவர்களும் இனி இந்த விஷயமானது நடைமுறையில் வந்த பின் என்ன நடந்து கொள்ளப்போகிறார்கள் என்பதையும் நோக்குவோம்.


பார்க்கவேண்டிய சந்தர்ப்பமும்கிட்டிவிட்டது. மேலும் காங்கிரஸ் என்பதின் பெயரால் தீண்டாமைவிலக்குக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் வசூலித்து இதுவரையில்மேடையின் மீது கர்ஜித்துவந்தகூட்டத்தார்களும் சுயராஜ்யம்சுயராஜ்யம்என்றுகூக்குரல்போடும்"தேசபக்தர்"களும்இனிஇவ்விஷயத்தில் எவ்வளவு தூரம் உண்மையாக நடந்துகொள்ளப் போகிறார்கள் என்பதையும் பொது மக்கள் அறியவேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் தீண்டாதார் விஷயத்தில் பாடுபடுவதாக வாக்களித்து சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களில் "தீண்டாதாரின்" பிரதிநிதியாக இடம்பெற்றும் இன்னும் அதே காரணமாக பட்டங்களை உத்தியோகங்கள் பெற்றும் உள்ளவர்களாய தீண்டப்படாதார்களுக்காகவே பத்திரிகைகள் நடத்தி வருபவர்களும் ஆகிய இவர்களெல்லாம் இத்தகைய நெருக்கடியான நிலைமையில் எவ்வளவுதூரம் முன்னணியிலிருந்து ஊக்கத்துடன் வேலை செய்யப்போகிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆகவே, இப்போது நமது நாட்டில் வீறு கொண்டெழுந்திருக்கும் இவ்வுணர்ச்சியானது, அதன் வெற்றி தோல்வி ஒரு பக்கமிருக்க, அதற்கு உண்மையில் தடையாக இருப்பவர்கள் யார் யார் என்பதையும், என்னென்ன காரணங்களினால் தீண்டப்படாதவர்கள் நிலைமை கேவலமாய் இருக்க நேர்ந்தது என்பதையும், அக்காரணங்களை எந்தெந்த வழிகளில் ஒழிக்கவேண்டும் என்பதையும் ஜனங்கள் அறிந்து கொள்ளவேண்டிய சந்தர்ப்பத்தையும் அளித்திருக்கிறது. இந்தக் கோயில் நுழைவு இயக்கத்திற்கு ஆதாரமாக அநேக சம்பவங்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருவதையும் நாம்பார்த்துவருகின்றோம். உதாரணமாக திரு. ஜெயகர் அவர்கள் தீண்டாமையை ஒழிக்கக்கூடிய ஒரு தீர்மானத்தை பம்பாய் சட்டசபையில் சமீபத்தில் கொண்டு வரப்போவதாகவும் அறிந்து மகிழ்கின்றோம். அந்தத் தீர்மானத்திற்கு டாக்டர் அம்பெட்கார் போன்ற பிரமுகர்கள் உதவியாயிருந்து வேலை செய்வார்களெனவும் தெரிகிறது.

இவர்களுடைய முயற்சி வெற்றி பெற்று சட்டமும் செய்யப்படுமேயானால், பெண்கள் சமூகத்திற்கு சாரதா சட்டம் எவ்வித பலத்தை அளித்திருக்கிறதோ அதே மாதிரி, தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் இந்த சட்டமும் பெரிய பலமாக இருக்கும் என்பதற்கு ஐயமில்லை. பம்பாய் மாகாணத்தைப் பார்த்தாவது நமது மாகாண சட்டசபையில் உள்ளவர்கள் தங்கள் கடமையைச் சிறிது சிந்தித்துப்பார்க்க ஆரம்பிப்பார்களா என்பது நமக்கு சந்தேகமாகவே இருக்கிறது.

இந்த நிலைமையில், பொது மக்களின் கடமை என்ன என்பதை மாத்திரம் நாம் விளக்கவேண்டியது அவசியம் என்று நினைக்கின்றோம்.

'இந்துமதத்'தைக் காப்பாற்றுவதாகச் சொல்பவர்களெல்லாம், இந்த விஷயத்தில் அதிக சிரத்தையெடுத்து தங்கள் கடமையைச் செய்யாவிடில் நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கான 'தீண்டப்படாதவர்கள்' முஸ்லீம்களாகவும் கிறிஸ்துவர்களாகவும் மாறிக் கொண்டிருப்பது மேலும் மேலும் பெருகிக்கொண்டே வரும் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. பெண்கள் விதவைகளாயிருந்து கஷ்டப்படுவதைவிட உடன் கட்டை ஏறுவதாயிருந்த பழைய வழக்கங்கூட எவ்வளவோ மேலானது என்று சொல்லுகிறோமோ, அதேபோல், மக்கள் தீண்டப்படாதவர்களாயிருந்து, குளம், ரஸ்தா முதலியபொது இடங்களின்சௌகரியத்தை அநுபவிக்க முடியாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும், முகம்மதியர்களாகவாவது மாறி மனிதர்களாகவாழ்வதுமேலானது என்று தைரியமாய்க் கூறுவோம். அவ்வித அவசியம் நேர்ந்து அதைத்தவிர தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கு வேறு மார்க்கம் இல்லையென்று முடிவாய்க்காண் போமானால் நாம் அதை வற்புறுத்திக்கூறியாவது அவர்களது துன்பங்களை இந்த க்ஷணமே ஒழிக்க வேண்டிய மார்க்கத்தில் இறங்கிவிடவேண்டியதாகத்தான் வரும். இதில் ஒன்றும் இரகசியமோ மறைபொருளோ கிடையாது. மனிதனுக்கு ஒரு மதமுமே அவசியமில்லை என்ற கொள்கையை யுடையோமாயினும் கொடுமைப்பட்டு அறியாமையில் அழுந்திக்கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு கைகண்ட பலனைக் கொடுக்கக்கூடியது முகம்மதிய மதம் என்ற கருத்தில்தான் சொல்லுகிறோமே யொழிய இதரமதங்களில் இல்லாத "மோட்சமோ" "புண்ணியமோ" முகம்மதிய மதத்தில் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தினால் அல்ல.' அப்படிச்செய்வதால் பிறகு எல்லோரையும் சேர்த்து மதம் என்ற சேற்றிலிருந்து விடுவிப்பதற்கு ஏற்படும் கஷ்டத்தையும் நாம் உணராமலில்லை. ஆனால், "தீண்டப்படாதவர்கள்" நிலைமையில் இதர ஜாதி இந்துக்கள் எனப்படுவோரும் இருந்தால் இந்த நிலையில் வேறு என்னதான் செய்யக்கூடும் என்பதை வாசகர்கள் சற்றுபொறுமையோடு யோசித்துப் பார்க்கும்படிகோருகிறோம். ஆகவே, இத்தகைய நிலையை நமது நாட்டில் உண்டாக்கிவிடாமல் தீண்டாமைக் கொடுமையை உடனே தாமதமின்றியில் ஒழிப்பதற்குப்பொது ஜனங்கள் எவ்வளவு கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதை அறிவுறுத்தும் பொருட்டே இதை எழுதினோம். ஆதலால் கோயில் நுழைவு விஷயத்தில் பொது மக்கள் தங்கள் கடமையைச் செய்வதோடு முக்கியமாக சுயமரியாதை இயக்கத்திலீடுபட்ட அன்பர்கள் அனைவரும் தீவிரமாக வேலை செய்யக்கடமைப்பட்டிருக்கின்றார்கள் என்பதையும் ஞாபகமூட்டுகிறோம்.

## தலைவர்கள் மலாய்நாட்டுப்புறப்பாடு



ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி அவர்கள், அவர் மனைவியார், திரு. அண்ணப்பர் எஸ். இராமநாதன் முதலியோர் காணப்படுகின்றனர்

# போலித் துறவிகள்

## துறவின் நோக்கம் யாது?

"செல்வம்"

இமயம் முதல் குமரிவரை இந்தியாவில் காணப்பெறும் காட்சி "உலகைத் துரும்பென" மதித்த துறவிகளெனப் படுவோரின் நடமாட்டக் காட்சியாகவே விளங்குவதை நம் நாட்டு மக்கள் எளிதில் அறிந்திருப்பர். பிரதி தினமும், காலை முதல் மாலை வரை நகரப் புறங்களிலும், காட்டுப் புறங்களிலும், குக்கிராமங்களிலும், மற்றிடங்களிலும் இவர்களினியக்கமே மக்களினிடை இயங்கிவருகிறதென்பதுங் கண்கூடு. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர்தான் நம் நாட்டில் துறவறமென்பது தெரிய வந்தது. புத்தர் பிரான் பிறர் துயர் நீக்க வெண்ணி, தன்னலமறுத்துத் துறவறத்தைப்போதித்தார். அத்துறவறம் ஆண் பெண் இருபாலருக்கும் சொந்தமாக விருந்தது. ஆண் துறவிகளும், பெண் துறவிகளும்—அதாவது எவ்வித சுகத்தையும் தங்களுக்கென கருதாமல் உலகமக்கள் சுகமெய்தக் கருதி—தங்களையே தியாகம் செய்துக் கொண்டு மக்களை உய்விக்க வழி தேடினார்கள். ஆனால், தற்போதோ அவ்வித மேன்மையோடு ஆரம்பிக்கப்பட்ட துறவு மக்களை ஏமாற்றிப் பொருள்பறிக்கவும், அடிமை கொள்ளவுமே உபயோகப்படுத்தப்படுகின்றது.

### பல்வகைத் துறவிகள்

தற்போது துறவு பூண்டவர்களின் தொகையே நாட்டிலெங்கும் மலிந்திருக்கிறது. தற்காலத்திலுள்ள இத்தகைய துறவிகளெனப் படுவோரில், யாதொரு வேலையும் செய்யத் திறனும் அறிவும் அற்று, சிறுபோதில் கேட்டறிந்த ஏதோ சில புராணக்கதைகளை மனதில் வைத்துக் கொண்டு, தேக மெங்கும் சாம்பற் குழைத்துப் பூசி, உருத்திராட்ச மணிகளை தேக மெங்கணும் அணிந்து "ஜெய் சங்கர்" போன்ற ஒரு சில வார்த்தைகளைத் தவிர வேறெவ்வித வார்த்தையும் சொல்லவும் அறியாத சுபாரசிகளும் உண்டு; வங்கத்தைத் தங்கமாக்குவதாகக் கூறிக் கொண்டு பாமர மக்களை ஏய்த்துப் பொருள் பறித்து உண்டு வாழும் வாத சந்நியாசிகளும் உண்டு; (பாமர மக்கள் தங்களுக்குள்ளது போதும் என்று எண்ணிக்கொள்வதே "பொன் செய்யுமருந்து" எனக்கருதாமல் பேராசையால் இப்போலிகளின்பாற் போய் உள்ளதையும் இழந்தவர்களாய்த் திரும்பிவிடுகின்றனர்) பாலிய பருவத்திலேயே பெற்றோர்க்கடங்காது காலிகளாகத் திரிந்து தங்கள் வயிற்றுச் சோற்றுக்கு எவ்வித வேலை செய்யவும் தெரியாமல், இரந்துண்பதையும் மனதிலெண்ணாது, கௌரவமாகக் காவியுடையைப் புனைந்து பால சந்நியாசிகளாகி, இளமைப்பருவத்திற்குரிய இயற்கையியற்றும் இன்னல்களைத் தாங்கும் தன்னடக்கமற்று, இதற்கென தறுதலைகளாகத் திரியும் ஒரு சிலரைத் தங்கட்குத் துணையாளராக வைத்துப் பெண்மக்களை மயக்கியும், பிரணவ இரகசியம் சொல்லித் தந்து முக்திக்காளாக்குவதாகக் கூறி (தங்கட்கே அதுவின்னதெனத் தெரியாத நிலையில்) பல இளம் விதவைகளைச் சிஷ்யைகளாகச் சேர்த்து வாசமுறச் செய்தும், அவ்வழிகளிற் போக வியலாதவர்கள் தங்களுக்குத் தாங்களே இயற்கைக்கு மாறான கொடிய முறைகளைக் கையாண்டு எங்குக்கட்டினாராய்ப்போய், பார்ப்பவர் கேட்பின், பலநாட்களாய் அன்னாகாரமின்றி சமாதிநிலையிலிருந்ததாகக் கூறித் தப்பித்துக் கொள்வாருமுளர்; மந்திர தந்திரங்களில் தேர்ந்துள்ளதாகக் கூறிக் கொண்டு 'சக்தி' தம்பால் வசமாயுள்ளாள் எனமயக்கி, பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவைகளை நீக்கிவிடுவதாகக் கூறிக் கொண்டு ஒன்றும் அறியாத பெண்மக்கள் பலரை ஏமாற்றிப் பிழைத்து வரும் மந்திர சந்நியாசிகளுமுளர்; கொலை, களவு, பிறர்மனைவிழைதல் போன்றவை புரிந்து அரச ஆக்கினைக்குப் பயந்து இப்பாழும் மாயவுலகு நமக்கேன்' என சந்நியாசம் பெற்றுக் கொண்ட வெறும் சந்நியாசிகளுமுண்டு. கிழவர்களாய் விட்டதனால், தங்களின் சக்தி, அழகு, தைரியம், மனோவன்மை முதலியன பற்பல காரணங்களினால் பலவீனப்பட்டமைகொண்டு தங்கள் வாழ்வின் பிற்காலத்தைச் சுகமாய்க் கழிக்கவெண்ணி, மக்களால் போற்றி புகாரம் செய்யப்படுவதான சந்நியாசம் பூண்டு, பெண்கள் இருக்குமிடங்களில் சென்று சிட்டாடியும், பாட்டுப்பாடியும், பெண்மக்களுடன் அளவளாவிப் பேசியும் அவர்களா லளிக்கப்படும் வாய்க்கினிய நல்லுணவுகளை யருந்தியும் காதுகளுக்கினிய சங்கீத உணர்ச்சி கேட்டும், கிணற்றில் வீழ்ந்திருக்கப்போனவன் குளிர் காய்ந்தபின்னை விழலாமென எண்ணியதுபோல், வெயிலுக்குக் காலில் செருப்பணிந்தும், தலைக்குக் கொடை பிடித்துக் கண்ணுக்குக் குளிர்ச்சியளிக்கும் கண்ணாடிகளை போட்டும் மனதுக்கினிய பல்விதக் காட்சிகளைக் கண்டு களித்தும், தாங்கள் ஐம்புலன்களையும் அடக்கி யாண்டு விட்டதாகக் கூறிக்கொண்டு திரியும் போலிச் சாமியார்களும் உளர்; எல்லாவற்றையுமே துறந்து ஆடைகளுமுடுக்க மனமின்றி, இயற்கை, மக்களை உலகில் எவ்விதம் கொண்டு வந்து தள்ளிற்றோ அந்நிலையிலேயே இருக்க விரும்பி நிர்வாணமாகத் திரிந்து தாங்கள் ஐம்புலன்களையும் அடக்கிவிட்டதாகக் காட்டிக்கொண்டு, மறைவில் பலவித மோசங்கள்புரிந்து வாழும் நிர்வாண சாமிகளுமுளர். இப்பொய்யான மாயைகள் நிறைந்துள்ள உலகைத் துறந்துவிடலே நன்று எனவெப்போதும் கூறிக் கொண்டு இப்போதே மெய்ஞ்ஞானத்தைக் கண்டு பிடித்து விட்டதே போன்று மமதைகொண்டு பிறரை மதியாது தாமே எல்லாம் அறிந்தவர் போன்று தலை தூக்கி நடக்கும் மெய்ஞ்ஞானப் பரதேசிகளுமுண்டு; மண் சட்டியொன்றைக் கையிலேந்தி ஞானம் பேசுவதாக நடித்து வரும் சட்டிப் பரதேசிகளும் உண்டு; வேளைக்கு வேளை இந்நாளன்று எங்கு திருவிழாக்கள் நடக்குமோவென எதிர்பார்த்து ஒவ்வொரு மூர்த்தி ஸ்தலங்களுக்கும் சென்று இரந்து பொருள் சேர்த்து உலக போகங்களை நீசத்தனமாக விழையும் சாதாரணப் பரதேசிகளும் உண்டு; வைணவப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தீக்ஷைகள் அளிப்பதாயும் முத்திரைகள் இடுவதாகவும் மோக்ஷத்துக்குரிய உபதேசங்கள் அளிப்பதாகவும், கூறி அழகிய பெண்களுக்குக் கடைக்கண் கடாட்சமளிக்கும் ஜீயர் சாமிகளுமுண்டு; பிறர் சொத்தைத் தம்மதே போல் பாவித்து, பத்திரமாகக் காப்பாற்றி தம் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள, சாமிகளையும், சாத்திரங்களையும் காட்டிப் பொருள் பறித்து எவ்வித நல்ல காரியங்களுக்கும் அதைஉபயோகிக்காமல் பூதமே போன்று அதைக் காப்பாற்றும் மஹந்துகளும் உண்டு; தாங்கள்தான் சித்தப் புருஷர்கள், தங்களுக்கு தங்கம் செய்யும் வித்தை, முப்புமுடிக்குந்திறன், போன்றவை உண்டெனக் கூறிபொருள் பறிக்கும் குட்டிச்சித்தர்களுமுளர்; சமயத்தை அப்படியே தங்கள் தலைமேல் வைத்துக் கொண்டு, காப்பாற்றுவதாகக் கூறிக் கொண்டு ஊரார் பணத்தைத் தின்று கொழுத்து, பெரிய பெரிய மடங்களில் நல்ல பஞ்சணைகளில் அமர்ந்து உலகம் மாயையென்றும் வாழ்க்கை அநித்தியம் என்றும் கூறி பாமர மக்களை ஏமாற்றித் தங்கள்மட்டில் அனுபவிக்க வேண்டிய சகல இன்பங்களையும் இராஜபோகமாக ஏமாந்தப்பட்ட மக்களின் உழைப்பைக் கொண்டு வீதிகளில் நடக்கவும் சக்தியற்று, மிக்க ஜீவகாருண்ணிய சீலர்களாய் மனிதர்கள் மீது சவாரி செய்யும் கொடூரம்வாய்ந்த மடாதிபதிகளும், ஜகத்குருக்களும், தம்பிரான்களும் உளர். இன்னும் இவர்களைப் போன்ற பல பிரிவினர்கள் இருந்த போதினும், இவர்கள் வழங்கும் மொழிகள் பலதிறப்பட்டனவாகவிருந்தபோதினும், இவர்களனைவரும் காவியுடையணிந்துக் கொள்ளுவதிலும், உலகைத் துறந்து மோக்ஷப் பெரும் பேற்றைத் தேடிக் கொண்டிருப்பதாகக் கூறுவதிலும் அநித்தியம், மாயை, பாசபந்தம், போன்றவைகளினின்றும் கட்டறுத்து நித்தியானந்தம் அடைய முயற்சித்துக் கொண்டிருப்பதாகக் கூறிக் கொண்டிருப்பதிலும் ஒரே தன்மையினராயிலங்கியே வருகின்றனர் என்பதிலையமில்லை.

### மக்களின் போக்கு

இத்தகைய துறவிகட்கு நம்நாட்டிலே மிகுந்த மதிப்புண்டு, பற்றுண்டு, செல்வாக்குண்டு. துறவறத்தைக் குறித்து பற்பல அரிய தமிழ்நூல்களும் நம்நாட்டில் இல்லாமலில்லை. ஏன்? தமிழ்நூல்கள் மட்டுமல்ல; உலகில் வழங்கும் மொழிகளிற் பெரும்பான்மையானவற்றில் துறவறம் புகழப்பட்டு நூல்களியாக்கப்பட்டன. ஆனால், துறவியார், உண்மைத் துறவியின் இலக்கணங்கள் யாவை, மக்கள் துறவற வாழ்க்கையில் ஏன் மதி மயக்கங்கொள்கின்றனர், துறவறம் துலங்கியது எப்பொழுது என்பது குறித்து நம் மக்கள் அறிய முயற்சிப்பதேயில்லை. அதற்கேற்பவே, அவ்வறம் பூண்டதாகக் கூறிக்கொள்ளும் சிலர் துறவற மிக்க நல்லறமில்லையெனவும், பேரின்பப் பெரும்பேற்றைப் பேராதரவு தரும் பெருமை அதற்கே உரியதென்றும் கூறி அறியா மக்களை அடிமைப்படுத்தி வருகின்றனர். நம்பிக்கைய நாட்டுக் குழந்தைகளேயன்ன மக்களும் அவர்கள் தம் ஆடம்பரத்தினும், சொல் வன்மையினும், நடிக்கும் திறமையினும், உடுக்கும் காவியாடையினும் மயங்கி நஞ்சே போன்ற அவர்களின் நடைபடை—அவர்களின் கடைக்கண்பார்வை தங்கள்மீது விழுந்தாற் போதுமெனும், வீணவாவை—கொள்ளுகின்றனர். காவியுடைதரித்து, திருநீறு, சந்தனம், திருமண் போன்றவையணிந்து வரும் ஒருவனைக் கண்டவுடன் தான் எவ்வளவு தான் கற்றவனாக விருந்தபோதிலுங் கூட தன்னறிவிழந்து, சுயமதிப்புணர்ச்சியற்று "நாமங்கள் சந்தனம், வெண்ணீறு பூசி நலமுடனே சாமங்கடோறும் இவர் செய்யும்பூசைகள்கற்பனையே" யென்னும் பட்டினத்தாரின் பொன்மொழிகளையும் சிந்தியாது அவனைப் போற்றிப் புகழ்ந்துபசரித்து வரலே த்ருதக்கின்றானேயன்றி உண்மையில் வறுமையிற்காணுயிர்விடும்தறுவாயிலிருக்கும் எளிய மக்களைக் கவனித்து உபகாரம் செய்ய அவன் மனம் விழைவதில்லை. அச்சந்நியாசியின் பிறப்பு, வளர்ப்பு, துறவின் நோக்கம் முதலியவைகளைக் கேட்டுணரவும் நாடுவதில்லை. ஏன்? சமயம், மதம் அவனை அச்செயல்களினின்றும் தடுத்தாட் கொள்ளுகின்றது. எனவே, இப்போலித் துறவிகளின் தூர்த்தத்தனம், மக்களிடை, மதத்தின் பேராலும், சமயத்தின் பேராலும், கடவுளின் பேராலும் நுழைந்து அறிவை மயக்கி அல்லற்படுத்திவைக்கின்றது.

### துறவென்பதென்ன?

துறவென்பது என்னவென்பதை இத்தகைய மக்கள்—அவர்கள் கற்றறிந்தவர்களாயிருப்பினுங் கூட அவர்களின் அறிவு, மத, சமய சேற்றில் மூழ்கடிக்கப்படுதால்—அறிய முயற்சி செய்வதே கிடையாது. துறவென்பது, காவியுடை தரித்து, கமண்ட

லங்கள் கொண்டு, சடாமகுட குண்டலதாரியாய்ச் சுற்றிலரும் சோம்பேறித் தொழிலா? மொட்டையடித்துக் கொண்டு கோவணங் கட்டி, திருவடிகளணிந்து தெருச் சுற்றுதலா? தான் தான் நூல்கள் பல ஆராய்ந்துள்ளவனென்றும், பிறர்க்கத்தகைய ஆராய்ச்சி கிடையாதெனவும், எண்ணி இறுமாந்திருக்கும் அகங்காரம் துறவாகுமா? பிறர் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைப்பதன் பயனை தக்க ஒரு ஆசிரமத்தில் சுகத்துடன் மௌனியாகி உட்கார்ந்து, பிறர் சுகதுக்கங்களைப் பொருட்படுத்தாது கொள்ளை கொண்டு வாழ்வதை துறவு வாழ்வெனத் தகுமா? தெருக்கள் தோறும் சென்று பிச்சையேற்று கிடைக்கும் பொருளைவிற்று சோமபானம் செய்து வாழும் கரவு வாழ்க்கை துறவாகுமா? ஒரு சில குடும்பங்கட்கு குல குருக்களாயமர்ந்து அக்குடும்பத்தினருக்கு வேண்டிய சமய உதவிகள் புரிந்து பொழுது போக்கும் கள்ள வாழ்வு தான் துறவாகுமா? தன் வாழ்க்கையில் தான் விரும்பியது பெறத்தவறினமையினால் ஏற்பட்ட சலிப்பினால் பூண்ட துறவு துறவாகுமா? அன்றி நல்ல பட்டுக் காவிகள் உடுத்தி, உணவு கொள்வதில்லையெனக் கூறி மக்களை யேய்த்து வெள்ளாட்டுப் பாலும் செவ்வாழைக் கனிகளும் தின்று, அழகிய சிவிகைகள் கால்வருட மெல்லிய பஞ்சணைகளில் உறங்கி, பல்லக்கில் ஊர்ந்து அரியாசனங்களில் அமர்ந்து பக்கத்தில் பலர் விசிறநின்றுகொண்டு மதபோதனை செய்வதாகவும் தீக்ஷைகள் அளிப்பதாகவும் கூறிக்கொள்ளும் மடாதிபதிகளின், மஹந்துகளின், தம்பிரான்களின், ஜீயர்களின் வாழ்வு தான் துறவுவாழ்வாகுமா? அன்று; அன்று; துறவென்பது இத்தகைய மறவறமன்று. ஆனால், துறவு என்பது உலகையே வெறுத்தல் என்றும், பெரும்பாலும், பெண்ணை வெறுத்தலென்றும், அதாவது, உலக இச்சைகளையே துறந்து, கந்த மூலாதிகளை யுண்டு பின்னர் அதையுந் துறந்து பேரின்பத்திற்கென தவங்கிடக்கும் நிர்மல வாழ்வெனக் கூறப்படுகிறது; வாசிகளை நிறுத்தி, கேவலமான இம்மலக் கூட்டை விட்டொழித்து, நிர்மலக் கடவுளைச் சேருவதற்கென பறந்தோடி வீடுதல் துறவெனக் கூறப்படுகிறது. இவைகளெல்லாம் உண்மைத் துறவாக மாட்டாது. ஏனெனில், "அறுமின் அறுமின் ஈசனோடாயினும் ஆசை யறுமின்" என்று கூறப்பட்டிருக்கும் செந்தமிழ்ப் பொன்னுரைகள் முதிர்ந்த துறவையும் இடித்திடித்துக் காண்பிக்கிறது. எனவே, அவர்கள் உலகையே துறந்து உயிர்விட்டு ஈசனைக் காணப்போயினும் அது தன்னலங் கருதும் இழிசெயலாகக் கருதப்படுவதுடன் ஆசையெனும் பாசம் அவனைவிட்டகலாமலேயே இருக்கிறதென்பதும் கண்கூடு. மக்கள், ஈசனிடத்தில் ஆசையெனும் பக்தியை தன்னலமெனத் துறந்தால் துறவறத்தின் கொள்கைதான் என்னேவெனக் கேழ்க்கலாமன்றோ? ஆம்; அர்த்தமற்ற முட்டாள்தனமான பிதற்றலே. ஏய்த்து அவர்களின் உழைப்பைப் பயன் பற்றி சீணித்தபொழுதைக் கழிக்கும் சோம்பேறித்தனமான — மேற்கண்ட போலித்துறவை மேற்கொள்ளுவது அறிவிலிகளின் செயலே. இத்தகைய துறவில் எத்தகைய புனிதமும், தெய்வீகமும் இல்லை. ஆனால் உண்மைத்துறவு இல்லாமலில்லை. உண்மைத் துறவு அனைவராலும் போற்றப்படக்கூடியதாகும். அது இயற்கைச் சட்டத்திற்கு இயைந்ததாயிருக்கும். அத்துறவு பூண்டோர் மக்கள் மனதை ஈர்க்கும் வன்மை வாய்க்கப்பெற்றோராவர்.

### உண்மைத்துறவு எது?

கடவுள் மக்களை உலகில் படைத்தாரெனக் கூறப்படுகிறது. அவ்வாறு படைத்தகடவுள் சர்வசக்தி வாய்ந்தவராகவும், சமரச நோக்குடையாராகவும் இருந்தால் மக்களனைவரையும் ஒன்றாகவே படைத்திருத்தல் வேண்டுமேயன்றி ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டிருக்கவியலாது. அதே போன்று பெண் மக்களையும் கடவுள் உலகில் ஆண் மக்கட்குச் சமானமாகவே படைத்துள்ளாரேயன்றி அவர்களை, பேயென்றும் மாயையென்றும் பழித்துப் பாட்டுப்பாடி, அவர்களை வெறுத்துத் தள்ளுவதாக வேடம் பூண்டு, பக்திகொண்டதாக நடிப்பதற்காகக் கடவுள் பெண்மக்களைப் படைக்கவில்லை. எனவே, இத்தகைய கடவுளின் படைப்புக்கு விரோதமான துறவிகளெனப்படுவோர், "பெண்ணெனும் மாயப் பிசாசு" என்று இழிநிலையில் பாடியும், அவர்களைத் திட்டியும் நடித்து வருவது உண்மைத் துறவல்ல. ஆனால் இதை மக்கள் உணருவதில்லை. அவர்கள் இத்துறவிகளின் இத்தகைய பெண் துவேஷத்தையும், அகங்காரத்தையும் கடவுள் நெறிக்கு மாறுபட்டதெனவும், கடவுள் நெறிக்கு (இயற்கைக்கு) மாறுபட்டு நடக்கவெண்ணினால் தேசத்திற்கு ஊறு நேருமாதலால் ஊறுகொண்ட ஒருவன் துறவியாயிருத்தல் பொருத்தமானதல்லவென்றும் உணராமல் அவனைப் போற்றிப் புகழ்கின்றனர். கடவுளுக்குத் துறவறந்தான் மிகவும் விருப்பத் தக்கதெனவிருந்தால்—அக்கடவுள் யோக்கியராயிருந்தால்—உலகில் பெண்மக்களையே பிறப்பித்திருக்க மாட்டாரல்லவா? எனவே, மனிதனின் நல்வாழ்விற்கும், உண்மைக்கும், நீதிக்கும், பக்திக்கும், அன்புக்கும் பெண் இன்றியமையாதவள் என்பதை உணர்ந்தே கடவுள் பெண்மக்களை ஆண்மக்களைவிட அழகாகவும், சகிப்புத் தன்மை, தன்னடக்கம், அன்பு போன்ற பெருங்குணங்களுடனும் படைத்துள்ளார் என்பதை மக்கள் ஏன் உணரலாகாது? கடவுள் மனிதனை உலகில் அனுப்பியது அவன் அவரின் ஆணைக்குட்பட்டு உலகவாழ்க்கையில் ஒட்டி நடக்கவேண்டுமென்று கருதி தான். அது தான் கடவுளின் திருப்திக்கான உயர்ந்த பக்திவழியாகும். அதைவிடுத்து கடவுள் கட்டளையை மீறுவது எங்ஙனம் உயர்ந்த பக்தியாகும்? எனவே, கடவுளால் உலகிலுட உண்மை வாழ்வு வாழ அனுப்பப்பட்ட மனிதன் அவரின் ஆணைக்கு விரோதமாக எவ்வாறு சோம்பேறித் தனமானவும் அவரின் கட்டளைக்கு விரோதமானவுமானதுபோலித்துறவு வாழ்வு வாழமுடியும்? கடவுளின் மற்றொரு படைப்பினரான பெண் மக்களைப் பழித்துக்கொண்டும், பிறர் உழைப்பினின்றும் பயனை அனுபவித்துத் தாமுழைப்பின்றி விருந்தும், உலக வாழ்விற்கு இன்றியமையாததான உணவைத் தேடித்திரிந்து உழைத்து உண்ணுவோர்க்கு பாரமாக இருந்தும், மக்களின் செல்வத்தைக் கடவுள் பேரைக் கூறி, மதத்தைக்காட்டி, தம் வேடத்தால்மக்களை மயக்கி, கொள்ளைகொண்டும் வாழ்க்கை வாழ்தலும் கடவுள் விரும்பத்தக்க நல்வாழ்வாகுமா? எனவே, இத்துறவை நல்லறமாகுமெனக்கூறுதல் எவ்வகையிற் பொருந்தும்? ஆனால் உண்மைத் துறவுதான் எதுவெனக் கேட்பின் கடவுளின்—அதாவது இயற்கையின் நியதிமீறாது உலக போகங்களையெல்லாம் நன்கு அனுபவித்து, இன்ப துன்பங்களில் உழன்று, வாழ்க்கையில் உள்ள சகல நன்மை தீமைகளையும் உணர்ந்து, அதில் நேரும் இடுக்கண்களைத் தாங்கிக்கொண்டு மக்களிடை உள்ள வாழ்வுப்போராட்டங்களை நன்கு அறிந்து, பலநூல்களைப் பயின்று சமரச குணம் வாய்க்கப்பெற்று, வாழ்க்கையின் பயனுடைய ஜன சமூக விருத்தி செய்து, அதன் மூலம் அன்பு என்பதன் உண்மையையறிந்து, குழந்தைகளின் மூலம் தன்னலமறுத்து சாந்தப்பொறுமை இரக்கம் கருணை கைவரப்பெற்று அனுபவம் நிரம்ப வாய்க்கப்பெற்று வாழ்க்கையின் இலட்சியத்தை இறுதிவரை இயற்கைக்கெதிரின்றி நடந்துக் கொள்வதன் மூலம் அடைந்து, மக்களை சமநோக்குடன் பார்த்து, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக இருந்து இன்பம் கீழ் தாமென வந்தெய்தத்தக்க அன்பர் பணிசெய்து, நான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக வென எண்ணி வாழ்பவனே உண்மைத் துறவியாவான். அவனே போற்றுதற்குரியவன்; மக்களில் மாணிக்கத்துக் கொத்தவன்; உண்மைத்துறவியெனப்படுபவன் இவனேயாவான். உண்மைத்துறவி ஏன் கானகத்துக்கு ஓட வேண்டும்? கந்த மூலாதிகளைப்புசிக்க வேண்டும்? வாசியை நிறுத்த வேண்டும்? வரும் பிணிகளையடையவேண்டும்? எதுவும் வேண்டியதில்லை. கடவுளால்- இயற்கையால்— உண்டாக்கப்பட்ட இவ்விரிந்த உலகில்— நாம் பிறந்த இவ்வுலகில்—இருந்து கொண்டே அனுபவத்தில் திரண்டு, உண்மை ஞானம் கைவரப் பெற்று, பெரும் மனோவாராய்ச்சிகளில் மனதைச் செலுத்தி, உண்மைகளைக் கண்டு அதைப் பிறமக்களுக்கும் எடுத்தியம்பி அனைவரையும் முன்னேற்றுவித்தலே உண்மைத்துறவியின் கட

ளும். உண்மைத் துறவியின் இதயம் குறுகிய நோக்கங்கொண்டதாயில்லாமல் அனைவரையும் ஒன்றென்றெண்ணும் பரந்த நோக்கங்கொண்டதாக விரியும். அவன் பெற்ற அனுபவங்களும், அறிவும், ஞானமும், பிறவும் அவனுக்கேயன்றி அனைவருக்கும் பயன்பட வைப்பவனே உண்மைத் துறவியாவான். தான் என்பதை மறந்து உலகினரையே தானாக மதித்து, உலகினரின் இன்ப துன்பங்களில் கலந்து உலகினரின் ஆக்கத்துக்கு வழிதேட பாடுபடுபவனே உண்மைத் துறவியாவான். அத்தகைய துறவிகளை நாம் போற்றுகின்றோம். அவர்களே கொண்டாடத்தக்க வேண்டியவர்களேயன்றி போலிகளல்ல. போலிகளைத் தொலைக்க, அவர்கட்கு அறிவுகொளுத்த, மக்கள் தயாராயிருக்க வேண்டுமேயன்றி காவியைக்கண்டவுடன் மயங்கி ஏமாறுதல் கூடாது அவ்வழக்கம் நம் நாட்டைவிட்டு ஒழிய வேண்டும். அப்போது தான் இவ்வேமாற்றுக் கூட்டம் ஒழிந்துவிடும். நாடும் நலனடைந்து முன்னேறும்.

## மதிப்புரை

### மேயோ கூற்று மெய்யா - பொய்யா?

கோவை திருவாளர் அ. அய்யாமுத்து அவர்களால் இயற்றப்பெற்ற மேற்கண்ட நூலின் பிரதி ஒன்று வரப்பெற்றோம்.

கன்னி மேயோ கருத்தைப்பற்றியோ, அவர் கூறியது இன்சொல் வாய்மைசொல்லா என்பது பற்றியோ நமக்குக் கவலையில்லை கூறிய கூற்று மெய்க்கூற்றா பொய்க்கூற்றா என்பதை நாம் அறிந்துகொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். இவர், மேயோ ஆதிக்க வெறி கொண்ட வெள்ளையர்களால் கூலிக்கு வேலை செய்ய வந்த குப்பைக்காரி என்கின்றனர். குப்பைக்காரி என்றும் ஏன்? மேயோவின் கூடையில் குப்பை நிறைந்ததா? இல்லையா? குப்பை திரட்ட வந்து வெறுங் கூடையுடன் சென்றனளா? வெறும் கூடையுடன் சென்று தான் நிறை கூடையுடன் இந்தியாவிலிருந்து திரும்பி வந்ததாகத் திரித்துக் கூறினளா? என்பன நமது கடா.

இக்கடாவிற்கு, வைக்கம் வீரர், மாசற்ற நெஞ்சுடையார், தூய வாழ்க்கையினர், தளராப் பொது நோக்குடையார், தேசத் தொண்டில் திளைத்த திண்மையினர், அத்தேசத் தொண்டை யதார்த்த தொண்டில் ஈடுபடுத்தித் திகழும் திருவுடையார், திராவிடன் குடியரசு பத்திரிகைகளில் பழந்தமிழ் மக்களிடை பரவிய மெய்ஞ்ஞானக் கட்டுரைகள் வரைந்து பயிற்சி மிக்கார், கோவை திருவாளர் அ. அய்யாமுத்து அவர்கள் "மேயோ கூற்று மெய்யா—பொய்யா"? என்னும் தலைப்பொடு ஒரு நூலை வெளியிட்டு தக்க விடையிறுக்கின்

# திரு. ஈ. வெ. இராமசாமிப்பெரியார் மலாய் நாட்டுப் பயணம்

## நாகையில் கப்பலேறல்
## ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்த்து

153ந் தேதி காலை 9-மணிக்கு நாகைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் "ரஜுலா" கப்பலில் மலாய் நாடு செல்லும் திரு. ஈ. வெ. இராமசாமிப்பெரியார் அவர்களை வழியனுப்ப வந்திருந்தனர். "திராவிடன்" ஆசிரியர் திரு. ஜே. எஸ். கண்ணப்பர் சென்னையிலிருந்து வந்திருந்தனர்; திரு. இராமாமிர்தத்தம்மாள் மாயவரத்திலிருந்து வந்திருந்தனர்; சிதம்பரத்திலிருந்து தென்பாதி டி. என். கனகசபையும் இராமலிங்கம் பிள்ளையும் வந்திருந்தனர் மற்றும் பட்டுக்கோட்டை மாயவரம் தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்து பலர் வந்திருந்தனர். சரியாக காலை 9-15க்கு திரு. இராமசாமிப் பெரியாரும் அவருடன் பயணப்படும் அவர் மனைவியார் திரு. நாகம்மாள் திருவாளர்கள் எஸ். இராமநாதன் எம். ஏ. பி. எல். பூவாளூர் பொன்னம்பலனார், மாயவரம் சி. நடராஜன், சாமி சிதம்பரனார் துறைமுகம் வந்து சேர்ந்தனர். அவர்களைத் துறைமுகத்திலிருந்த பெருந்திரளான மக்கள் ஜே. கோஷத்துடன் வரவேற்றுமாலையிட்டனர். பிறகு நாகைபிரபல போட்டோகிராபர் திரு. ஜி. வி. நாயுடு அவர்கள் புகைப் படம் எடுத்தார், திரு. இராமசாமிப் பெரியாரும் மற்றையோரும் ஒவ்வொருவரிடம் பயணம் சொல்லிக்கொண்டு 9-45 மணிக்குப் படகிலேறிகப்பல் சென்றனர் அப்பொழுது இராமசாமிப்பெரியாருக்கு ஜே! இராமநாதருக்கு ஜே! நாகம்மாளுக்கு ஜே! என்ற கோஷங்கள் வானம் கிழியஒலித்தன கரையோரத்தில் நின்று கொண்டிருந்த மக்கள்படகு கண்ணினின்றும் மறையும் வரையும் ஜே. கோஷித்து கை வீசிக் கொண்டிருந்தனர். பாரிஸ்டர் திரு கே. சி. சுப்பிரமணியம் திரு, ஜி. வி. நாயுடு, தேசபக்த சமாஜ அங்கத்தினர் முதலியோர் பிரயாண சௌகரியத்துக்கு மிக உதவி செய்தனர். அவர்கள் முதலிலிருந்து கடைசிவரையும் இருந்தனர். திரு. இராமசாமிப் பெரியார் டிசம்பர் 20ந் தேதி காலை பினாங்கு சேருவார். அங்கு பெரிய வரவேற்பும் உபசாரப் பத்திரங்களும் கொடுக்கப்படும். 21ந் தேதி தமிழர் மகாநாட்டை ஈப்போவில் திறந்து வைப்பார். அதற்குப் பின் கீழ்க்கண்டவாறு மலாய் நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்வார்:—

பினாங்கு சேருவது 20—12—29 காலை 7 மணி.
பேரா இந்து மகா ஜன சபையார் உபசாரப்பத்திரம்
பினாங்கு இந்து வாலிபர்களின் உபசாரப்பத்திரம்.
பினாங்கு மருத்துவகுல சங்கத்தினர் உபசாரப்பத்திரம்.
ஊர்வலம்.

20—12—29. பகல் 1-30 மெக்கெல் பியர் உபசாரம்
,, 2 கோலப்பிறை உபசாரப் பத்திரம்
,, 4 நிபாங்டபால் ,,
,, 5-30 பாரிலு பண்டர் ,, (தேபானம்)
,, 7-30 தைப்பிங்கு ,, (இரவு உணவு தங்குதல்)

21—12—29. காலை 6-30 தைப்பிங்கு விட்டு புறப்படுதல்
,, 8-30 கோலாகங்சர் உபசாரப்பத்திரம்
,, 10-30 சுங்கை சுபுட் ,,
,, 12 ஈப்போ (பகல் உணவு)
1-30 மணி மகாநாட்டு ஊர்வலம்
3. மணி பேரா இந்துமகாஜனசபையாரின் உபசாரப்பத்திரம்
3-30 மணி பெரியாரின் திறப்புவிழா, சொற்பொழிவு
மகாநாட்டின் முதல்நாள் நடவடிக்கை

22—12—29. மகாநாட்டின் இரண்டாம் நாள் நடவடிக்கை
23—12—29. விடுமுறை
24—12—29. கோபங் உபசாரப்பத்திரம் 8—30 மணி
கம்பார் ,, 10—30 மணி
மத்தியான உணவும் மாலை தேபானமும்
தெலுகான்சான் உபசாரப்பத்திரம் 5 மணி
இரவு போஜனம் இளைப்பாறுதல்.

25—12—29. தாப்பா உபசாரப்பத்திரம் 8 மணி
சுங்கை ,, 10—30 மணி
மத்தியான உணவு
தஞ்சமாலிம் உபசாரப்பத்திரம் 4-30 மாலை
கோலாலம்பூர் ,, 6—30 ,,
இரவு உணவு இளைப்பாறுதல்

26—12—29. விடுமுறை
27—12—29. கிளாங்கு உபசாரப்பத்திரம் 8 மணி மத்தியான சாப்பாடு.
காஜாங் உபசாரப்பத்திரம் 4-30 மணி தேபானம்
சிரம்பான் உபசாரப்பத்திரம் 6 மணி இரவு போஜனம் இளைப்பாறுதல்

28—12—29. தம்பின் உபசாரப்பத்திரம் 8-30 காலை மத்தியான உணவுமலாகா உபசாரப்பத்திரம் 4-30 மாலை தேபானம்
இரவு உணவு இளைப்பாறுதல்

29—12—29. மூவார் உபசாரப்பத்திரம் 7-30 மணி (சிற்றுண்டி)
பதுப் பிஹாரு ,, 10-30 மணி

மறு வார நிகழ்ச்சி முறைபின்னர் வெளியிடப்படும்.

---

ரூர். இதனைப் படிக்குந்தோறும் இப்பெருந்தகையாரின் மதிநுட்பமும், மனத்திலுதித்த கருத்தை உதித்தவாறு எடுத்தியம்பும் திறனும், நல் நிலைமையும் இனிய செந்தமிழ்ச் சுவையோடு பால், தேன், பழம் கலந்தவாறு இனிப்ப என்பதில் ஐயமின்று. உண்மையை அறிய அவாக் கொண்டவர்கள் இந்நூலை அவசியம் ஒரு முறையேனும் படித்தல் தகைமையாகும். இத்தகைய நூலை வெளியிட்ட அறிஞர்க்கு இத்தமிழுலகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. குமரன் அச்சு நிலையத்தில் அழகுபெறப் பதிப்பிக்கப் பெற்ற இந்நூல் விலை அணா. 0—4—0

---

## மதிப்புரை

### 100 வருஷத்திய பஞ்சாங்கம்

மதுரை திருவாளர் எஸ். கூடலிங்கம்பிள்ளை அவர்களால் வெளியிடப் பெற்ற 100 வருஷத்திய பஞ்சாங்கப் பிரதி ஒன்று வரப்பெற்றோம். இந்நூலையார் எப்படிக் கருதிய போதிலும், கால அளவிலேயே இவ்வுலகம் இயங்குதலான், இவ்வுலக வாழ்க்கைக்குக் கால அளவு இன்றியமையாதிருத்தலான், காலகணிதத்தைக்குறிக்கும் அளவில் இந்நூலைநாம் மிகமிகப் பாராட்டுகின்றோம். வாரம், திதி, நட்சத்திரம், யோகம், காரணம் ஆகிய ஐந்துறுப்புக்களைக்கொண்ட ஒருநூலுக்கு பஞ்சாங்கம் என்று பெயர். இப்பஞ்சாங்க இலக்கணங்களை உள்ளவாறு, கணக்குத் தவறாமல் கணிப்பது என்பது எளிதில் இலகுவானதோர் காரியமன்று. நுண்ணியகணித விற்பன்னரே இத்தகைய நூல்களைத் தொகுத்தற்குரியார். மதுரை திருவாளர் எஸ். கூடலிங்கம் பிள்ளை அவர்கள் முன்னரேயே 60 வருடத்துப் பஞ்சாங்கம் ஒன்றைத் தொகுத்து வெளியிட்டு அதனாலும் ஏனைய பல நூல்களாலும் தமிழுலகப் பிரசித்தி அடைந்தவர் என்பதை யாவரும் அறிவராதலின், இவர்களால் வெளியிடப்பெற்ற இந்நூலை நாம் எத்துணை புகழினும் அத்துணையும் போதியதாமோ என்று கவல்கின்றோம்.

நிற்க; முன் சூரிய ஆங்கீரச வருடம் முதலாக உள்ள எல்லாத் தமிழ் சகாப்தவருடங்களுக்கும், மாதங்கட்கும், நாட்களுக்கும் இதில் ஆங்கில வருடம் மாதம் நாள் கணித்திருப்பது, சரித்திர ஆராய்ச்சியாளர்க்கும், மற்றுமுள்ள (கோர்ட்டு) நீதி மன்ற நடவடிக்கைகள் முதலியன உள்ளவர்கட்கும், பொதுவாக சகலருக்குமே இதனால் மிகவும் பயன் ஏற்படும் என்று கருதுகின்றோம்.

எனவே, இந்நூல் தமிழ்நாட்டினர் அனைவருக்கும் பயன் படுவதுடனின்றி, நகரசபைகள், தாலூக்கா போர்டு, ஜில்லாபோர்டு, கல்வி இலாக்கா, பதிவு இலாக்கா, கூட்டுறவு இலாக்கா, புத்தகசாலைகள் முதலிய எல்லா ஸ்தாபனங்களுக்குமே இன்றியமையாதது என்பதும் எமது கருத்து.

இதன்விலை முதற்றாா பதிப்பிற்கு 10–0–0 ரூபாயாகவும், இரண்டாந்தரப்பதிப்பிற்கு 7–0–0 ரூபாயாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

இதன் விளம்பரமும் நமது திராவிடனில் பிரசுரித்திருக்கின்றோம். காண்க.

கிடைக்குமிடம்:— எஸ். கூடலிங்கம் பிள்ளை, புத்தகக்கடை, புது மண்டபம், மதுரை.

---

# வேற்றுமை விருக்ஷம் வேரோடுவீழ்க!

# இராமாயண சாவுமணி ஓசையை அறியாது பாகவதர்கள் பிதற்றுவதேன்?

(குடந்தை நகர் நடராஜன் எழுதுகிறார்)

காரத்தில் புத்தகம் வைத்திருக்கின்றார்கள், மலஜலம் கழிக்கும் நேரம் தவிர மற்ற நேரங்களில் புரட்டி புரட்டி வாசிக்கின்றார்கள். சில சமயங்களில் முணுமுணு வென்று ஓதுகின்றார்கள். சில சமயங்களில் வாய்விட்டும் அலறுகின்றார்கள். உலோயில் புரளும் பன்றிபோல சமஸ்கிருதம், தமிழ் இவைகளில் ;செய்திருக்கப்பட்ட வேத புராணங்களில் மகா பாண்டித்தியம் பெற்றவர்கள் என்று மார் தட்டுகின்றார்கள். என்ன ஐயா! சாஸ்திரியாரே! ஜப்பானியர் ஜப்பானையும், சீனர்கள் சீனதேசத்தையும், ஜெர்மெனியர் ஜெர்மனி தேசத்தையும், ரஷ்யர் ரஷ்யா தேசத்தையும், பிரிட்டிஷார் பிரிட்டனையும் மற்றும் ஏனைய தேசத்தார் தத்தம் தேசத்தை அரசாளுகின்றார்கள். இதுவும் போதாதென்று சமுத்திரத்தையும் பாகம் போட்டுக் கொண்டார்கள். இப்பொழுதோ, ஆகாயத்தையும் வீதம் போட்டுக்கொள்ளுகின்றார்களே! இந்த தேசத்தில் பிறந்த இந்துக்களாகிய நாம் எந்தேசத்தை ஆளுவது? கடலிலாவது ஆகாயத்திலாவது நமக்கு பங்கு பாகம் ஏதாவது உண்டா என்று கேட்டால் நமக்கு மதம் பிரதானம்; கைலாசத்தையும் வைகுண்டத்தையும் ஏகபோகமாக அரசாளலாம். சமுத்திரம் வேண்டுமானால் வைதரணீ நதி இருக்கிறது. அதைகடப்பதற்கு சப்மரீனும் வேண்டுவதில்லை. கப்பல்களும் வேண்டுவதில்லை. பார்ப்பனராகிய எங்களுக்கு ஒரு பசுமாடு மாத்திரம் தானங்கொடுத்தால் சுலபமாக கடந்துவிடலாம். ஆகாயத்தில் பறக்கவேண்டுமானால் காயத்திரி ஜெபம் இருக்கிறது என்று வெட்கம், மானம் தன்மதிப்பு இவைகளின் தொந்தம் இல்லாமல் பேசிக்கொள்ளுகின்றார்கள். பேசும் பொழுதோ வேத புராணங்களையும் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். அந்தோ! இப்படித்தானா இவர்கள் கல்வியின் திறமையை பிரயோகிக்கவேண்டும்.

மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசம் பகுத்தறிவு ஒன்றேயாம். ஆதலால் ஒருவர் செய்த கூற்றை நல்வழி கொண்டு காணப்பெறினும் அல்லது அவர் மொழியை செவியிலேற்க நேரினும், நன்று, தீது, மெய், பொய் இவற்றின் எது நியாயம் என்று பகுத்தறிவின் சக்தியால் பகுத்தறிந்து, நன்றயின் கைபிடித்து, தீதயின் கைவிடுத்து, நியாயத்தின் சார்பில் மனம், வாக்கு, காயம் மூன்றையும் சமர்ப்பிப்பதே மனிதத் தன்மையின் நோக்கம். இதனால்தான் மிருகங்களைவிட ஒரு சிறு அளவு அதிகமான பகுத்தறிவு என்னும் சக்தியை பெற்று இருக்கிறோம். மகா மேதாவிகளான பண்டிதர்களாயினும், வாய்ப்பந்தலிடும் வல்லுனர்களான பாகவதர்களாயினும், அவரெல்லையிற் பகுத்தறிவு இல்லையாயின் அவர் கல்வித்திறன் விளைவின் கனியையும் எட்டிக்கனியையும் நிகர்க்கும். அன்றியும் இத்தகைய ஆராய்ச்சியற்ற கல்வியாளரை பகுத்தறிவற்ற விலங்கினத்துடன் சேர்ப்பதில் ஐயமும் உளதோ? சொன்னதை சொல்லும் கிளிகள்போல தனது வாழ்நாளில் ஏடுகளில் கண்டவற்றை கண்ட விடங்களில் கக்குகின்றார்களே ஒழிய, அவற்றில் மலிந்து கிடக்கும் ஆபாசங்களை நீக்கி, அதை மக்கள் சமூகத்தினிடையே போதித்து நாட்டின விருத்திக்கு பயன்படுமாறு செய்யாது அயல்நாட்டார் ஏளனம் செய்யும் வழியில் தமது குறுகிய புத்தியை இராமாயணசத்காலக்ஷேபம், சீதாகல்யாணம், அறுபத்தி மூன்று நாயன்மார் கதைகள் முதலிய புராண பிரசங்கத்தின் வாயிலாகவும் காட்டிக்கொள்ளுகின்றனர்.

இவ்விதம் தமக்குள்ள அறிவை ஆராய்ச்சியின் வல்லமையால் அயல் நாட்டினரைப்போல் ரசாயனம், பூதபௌதிகம், தாவரசாஸ்திரம், வான சாஸ்திரம்; பூகோளசாஸ்திரம் முதலிய அரிய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யாமல் உழைப்பின் சிறப்பு அறியாது பிச்சை ஏற்று உண்ணும் பிச்சைக்காரர்சாவடிகளான கோயில் தோறும் சிலவிதவைகளையும், அவர்களிலும் கீழ்த்தரப்பட்ட ஆடவர்களையும் சேர்த்துக்கொண்டு இராமாயண சீரியல்நடத்தும்பாகவதர்களின்கல்வி எங்ஙனம் பயன் தரத்தக்கதாகும்? இங்ஙனமே மேல்நாட்டார் ஒருகண பொழுதையும் மதத்திற்கும், சாஸ்திரத்திற்கும், கோயிலுக்கும், யாகத்திற்கும், மோட்சத்திற்கும் மற்றும் ஆபாசமான மூடப்பழக்க வழக்கங்களுக்கும் செலவு செய்யாது தமது ஆராய்ச்சியின் வல்லமையால் ஆகாயத்தில் அந்தரமாக நிற்கும் செவ்வாய் என்ற கிரகத்துக்கு எப்படி செல்வது என்று ஆராய்ச்சி செய்து சித்தி அடையக் கூடிய இக்காலத்தில் இராமாயண சீரியல் நடத்தும் பாகவதர்களின் கல்வி எங்ஙனம் ஆராய்ச்சி உள்ள கல்வியாகும். ஆகவே, நாம் ஒரு புத்தகத்தை வாசிக்க நேரிட்டால் அப்புத்தகத்தின் கொள்கைகளின் மீதோ அல்லது அதன் ஆசிரியர்மீதோ அவேஷ புத்தி பாராட்டி வெறுப்புகொண்டு கீழ் எறிந்து விடாது விருப்பு, வெறுப்பு நீக்கி நிரந்தரமாக ஆராய்ச்சி அறிவின் வல்லமையை பிரயோகித்து வாசித்துப் பார்ப்பாராகில் அவற்றிலடங்கிய அரிய விஷயங்களையோ அற்ப விஷயங்களையோ செவ்வனே உணரலாம். இவ்விதம் தமது ஆராய்ச்சியின் வல்லமையால் குற்றங்கண்ட பின்னரே அந்நூலாசிரியரை கேள்விகள் கேட்க வேண்டும். இதுதான் கற்றுணர்ந்தாரின் அறிவுடைமை மார்க்கமாகும்.

இத்தகைய ஆராய்ச்சியின் வல்லமையை நமது சந்திரசேகரப் பாவலர் பெருமான் இராமாயணத்தின் மீது பிரயோகித்து தகுந்த ஆதாரங்களுடன் அவற்றில் காணும் நமது இந்து தெய்வங்களின் அருவருக்கத் தகுந்த செய்கைகளை வெளியிட்டிருக்கின்றார்.

ஜனசமூகத்திடையே அநேக நூற்றாண்டுகளாக பரவப்பட்ட இராமாயணநோயைநீக்குகின்ற சந்திரசேகரப் பாவலரின் கல்வி ஆராய்ச்சி உள்ளதா அல்லது சொன்னதை சொல்லும் கிளிகள் போல் தாம் படித்தவற்றை படித்தது போலவே திருப்பிச் சொல்லும் பாகவதர்களின் கல்வி ஆராய்ச்சி உள்ளதா? என்பதை நமது அறிவின் சக்தியால் ஆராய்வோமானால் பாகவதர்களின் கல்வி ஆராய்ச்சி அற்றதாகி ஜனசமூகத்தையும் தேசத்தையும் பாழ்படுத்தும் மவுட்டீக கல்வி என்றே நமது அறிவுக்கு புலனாகின்றது. எனவே, மக்கள் யாவரும் தமது கல்வியை பிரகாசிக்கச்செய்யவேண்டுமானால் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நல்லன தீயனவற்றை தன்னறிவுகொண்டு ஆராய்ந்து கல்வியை மவுட்டீகத்தின் சார்பில் செலுத்தாது பகுத்தறிவின் சார்பில் செலுத்துவோமாகில் நாமும் ஏனைய தேசத்தவரைப்போல் ரசாயன உலகத்தில் முதலணியில் நிற்கலாம்.

"ஆறுகோடாகியதரிடை நின்ற துடங்
காழ்கொண்ட கண்ணேகளி
றணைக்குங்கந்தாகும்"

ஒரு மரம் சிறிய கொம்பாக இருந்து நாளடைவில் முற்றி வைரம் பாய்ந்து விட்டால் பிறகு ஒரு யானையையும் கட்டலாம் என்றவாறு நாம்கற்ற கல்வி சிறு கொம்பேபோல் இருந்தாலும் ஆராய்ச்சி என்ற வைரம் பாய்ந்து விட்டால் கல்வியில் பெரிய யானை என்று நாம் எண்ணி இருந்த கம்பனையும் வால்மீகியையும்புத்திவாதம் என்ற கயிற்றால் கட்டிவிடலாம். கம்பன் மாபெரும் கவிசக்கிரவர்த்தியாயினும் அவன் ஆராய்ச்சியின்றி இராமன் கதையை தமிழில் பாடியதை நமதுசந்திரசேகரப்பாவலரின் ஆராய்ச்சி வல்லமையால் தகர்த்தெறியப்படுகிறது. தமிழ்நாட்டினுள கம்பன் தமிழர்களை தாழ்வுபடுத்தகூறும் ஒரு நூலைஆரியர்களின் ஆக்கினைக்குப்பயந்து தென்னாட்டு தமிழர்களை குரங்குகள் என்றும், ராட்சதர்களென்றும் கூறும் ஒரு இழிபாதகன் எங்ஙனம் கவிசக்கிரவர்த்தியாவன்? சகோதரத்துரோகி, தேசத்துரோகி, இனத்துரோகி, குலத்துரோகிகளின்சரித்திரத்தை மகா புண்ணிய நூலாக வருணித்துப்பாடிய கம்பனை தேசத்துரோகி, குலத்துரோகி, இனத்துரோகி என்றழைக்கக்கூடாது? இத்தகைய கிராதகனின் கவித்திறமைக்கு நாம் எந்த விடத்தும் எந்த காலத்தும் அஞ்சவேண்டிய பிரமேயமில்லை. இவற்றை எல்லாம் உள்ளியே நமது சந்திரசேகரப் பாவலர் இராமாயணத்தின் ஆபாசம் என்ற நூலை வெளியிடுகின்றார். எப்படி நாம் பக்குவமில்லாத ஆகாரத்தை உண்டு அஜீரணத்தால் அவதிப்படும் பொழுது சிறிதளவு ஓமத்திராவகத்தில் அஜீரணம் நீக்கப்பெற்று சந்தோஷமடைவதேபோல் நாம் வெகு காலமாக பக்குவமில்லாத நூலாகிய இராமாயணத்தை (அறிவை குன்றச் செய்து மவுட்டீகத்திற்கு ஆளாக்கிய நூலை) உண்டு மவுட்டீக நோயின் உபாதையால் கஷ்டப்பட்ட ஜனசமூகத்திற்கு சந்திரசேகரப் பாவலர் ஓர் விடதாரி ஆனார். அதாவது, தனது கல்வி என்றவாலயில் இராமாயணம் என்ற ஓமத்தை இட்டு ஆராய்ச்சி என்ற அப்பின் உதவியால் காய்ச்சி, வடிகட்டிய சத்துவே "இராமாயணத்தின் ஆபாசம்." ஆதலால் தமிழ் மக்களாகிய நமக்கு இராமாயணத்தால் ஏற்பட்டிருக்கும் மவுட்டீக நோயை நீக்கிக்கொள்ள வேண்டுமானால் "இராமாயணத்தின் ஆபாசம்" என்ற சந்திரசேகரப்பாவலரின் ஓமத் திராவகத்தை அருந்தித்தான் ஆகவேண்டும். அப்பொழுதுதான்சிவன், விஷ்ணு, பிரம்மா, இந்திரன், சப்தரிஷிகள் முதலிய நமது முக்கிய தெய்வங்களுடைய, புராணகர்த்தாக்களுடைய, இருந்த குணங்களும் அருவருக்கத்தக்க செய்கைகளும் வஞ்சனை சூதுகளும் செவ்வனே உணரலாம். ஆதலால் இராமாயணத்தின் ஆபாசம் என்ற நூலை வாசித்துணரும்படி நாம் யாருக்கு வற்புறுத்திசொல்லுகின்றோம் என்றால், பகுத்தறிவு அற்று தான் கண்டதே காட்சி கொண்டதே கோலமென தலைவிரித்தாடும் பகுத்தறிவற்ற பாகவதர்களுக்கும், சாஸ்திரிகள் ஐடா வல்லபர் முதலிய ஆரிய, ராமபக்தர்களுக்கும் சொல்லவில்லை. ஆனால், மதில் மேலிருக்கும் பூனைபோல் அறிவை நடுநிலைமையாய் வைத்திருக்கும் தமிழ் வாலிபர்களுக்கே சொல்லிக்கொள்ளுகிறோம். இதனால் நான் பாகவதர்களையும் இதர சாஸ்திரிகளையும் வாசிக்கக்கூடாது என்று சொல்லவில்லை.

"பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லாதிழிந்தவை காமுறூஉமீப்போப்போ—லிழிந்தவை தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னுந் தக்கார்தேன் கலந்தேற்றச் சொற்றேர்வு." (வாய்த் மொழிப்புரை)

இனிமையான வாசனையைக்கொடுக்கும் மலர்களிலுள்ள தேனை இச்சியாது இழிவான மலத்தை இச்சிக்கும் ஈக்கள் போல இழிவான செய்கையுடைய மனதுடையார்க்கு அறிவில் முதிர்ந்த பெரியோர்களின் இனிய ஆராய்ச்சி உள்ள சொல் எங்ஙனம் பலனை அளிக்கும்; என்றவாறு அறிவில் வல்லவரான சந்திரசேகரப் பாவலர் என்னதான் கதறினும், தன்னைவிட மிஞ்சினாரில்லை என்று தர்க்கித்து பொதுவாக சுயமரியாதைக் கட்சியை தூஷிப்பதையே வேத வாக்கியமாகக் கொண்டவர்களாதலால் அந்நூலைக் கண்டவிடத்து

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிலே பெறுகிறது. இனி கம்பர் பாட்டை வெளிப்படுத்துவோம்.

அனுமான் சீதையை நெருங்கியதையும் அது கண்டு அவள் நடுங்கி அலறியதையும் கம்பர் மறைத்தார். இராமனுடைய உறுப்புக்களை அனுமான் கூற்றாக விவரிக்கின்றாரோ னும் வால்மீகி கூறியபடி ருதியையும் விதைகளையும் மாறி மாறி விவரிக்காமல் விட்டுவிட்டார் கம்பர். சீதையினுடைய அந்தரங்க உறுப்புக்களைக் கூட விவரித்த கம்பருக்கு இவைகளை விவரிக்கத் தோன்றாமை வியப்பே!

இராமன் சொல்லிவிட்டதாக அனுமான் சீதையிடம் சில சொல்லுகிறான் எனக் கம்பர் கூறுகிறார். அவை வால்மீகி கூறாதனவே. சீதை இராமனுடைய மோதிரத்தைப்பெற்றவுடனே அதனை "வாங்கினள் முலைக்குவையில் வைத்தனள்" (உருக்காட்டு படலம் 66) என்று கூறிக் கம்பர் மகிழ்கின்றார். மேலும் அடுத்த பாட்டிலும் (67) 'மோக்கு முலை வைத்து' என்று கூறுகிறார். சீதையினுடைய மகிழ்ச்சியைக் காட்டிலும் கம்பர், இச்செய்கைச் சொல்வதால் பெரு மகிழ்ச்சியடைந்தார் போலும் மேலும் இரண்டு பாடல் தள்ளி பாடல் எழுதியதில் சீதை மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தாள் என்று கூறும் புலவர் பெருந்தகை 'முத்த நகையாள் விழியின் ஆலிமுலை முன்றில் தத்தி உக' என்று கூறுகிறார். இவ்வாறு இவர் பல இடங்களிலும் கூறி வருவதை நாம் முன் சிற்சில இடங்களில் எடுத்தெழுதினோம்.

அனுமான் சீதையினுடைய கொங்கைகளைக் கண்டுமகிழ்ந்து பலமுறை நோக்கினனென வால்மீகி கூறுகிற உண்மையை உணர்ந்தோ உணராமலோ கம்பர், சீதையை நோக்கி அனுமான் "வம்பின் முலையாய்!" (உருக்காட்டு படலம் 117) என்று விளித்ததாகக் கூறுகிறார். இது மிகவும் வியப்பே! தாய் முலையெனக் கூறப்பெறும் சீதையை நோக்கி மகன் முறையினனாகிய அனுமான் இவ்வாறு தான் அழைத்தல் வேண்டும் போலும்! என்னே! இவ்வொழுக்கமுறை இருந்தவாறு? இவ்வுண்மைகளை நாம் எடுத்தியம்பினால் கம்பரை இகழ்கின்றோமென்று சிலர் கூறுகின்றார்களாம். இவைகளை எடுத்தியம்பாது மறைத்து மறைத்து வைப்பது அறிவுடையாமா என அவர்களை வினவுகின்றோம். இவ்விது எண்ணமுடையார் மலிவிலுலே நாடு பாழடைகின்றது. குறுகிய உணர்ச்சியோ, உன்மை நாவேதில் குருடாம் கண்களோ என்று கெட்டு மலருமோ அன்றே நாடு நலம் பெற்றுத் திகழும்.

கட்டுடியையும் புலாலுணவையும் இராமன் சீதையைப் பிரிந்த வருத்தத்தால் விட்டிருந்தனன் என்ற உண்மையைக் கம்பர் கூறவில்லை. ஏனெனில் இராமன் அத்தகையான் என்பதை தமிழ் உலகம் அறியுமிடத்து தாம் அவனைத் தெய்வம் போலக் கூறி உலகை மயக்க வேண்டுமென்னும் நோக்கத்துக்கு அது இடையூறெனவெண்ணினர் போலும்! அனுமான் தன் பிறப்பின் வரலாற்றை விவரித்துரைத்த செய்தியும் கம்பர் மறைத்தார்! இனிமேற் செல்லுவாம்.

அந்நூலின் பால் ஏற்பட்ட துவேஷ புத்தியாலும் அதை இயற்றிய கர்த்தாவாகிய சந்திரசேகரப்பாவலர் ஆதவனின் ஆட்சி முடியுங் காலம் வரைக்கும் அழியாப் புகழை எய்தி 19 நூற்றாண்டிலிருந்து இராமாயணத்திற்கு சாவு மணி அடித்து விட்டாரே என்ற பொறாமையாலும் இந்நூலை ஆதரித்து பார்ப்பனர்களின் அக்கிரமத்தை பலமாகக் கண்டிக்கும் சுயமரியாதை இயக்கத்தின் பால் ஏற்பட்ட துவேஷ குணத்தாலும் அவர்களாகவே கீழே போட்டு விடுமுன் அவர்களுக்கான நூல் அல்ல என்பதை முன்னராகத் தெரிவித்துக் கொண்டோமே ஒழிய அவர்களை படிக்க வேண்டாமென்று சொல்லவில்லை வாசித்து உணர இஷ்டமுள்ள பலவதர்களும் சாஸ்திரிகளும் வாசித்துத் தமது அறிவை புனிதப்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் நாங்களும் தடைசெய்யமாட்டோம். அதை தடைசெய்வதுவும் எங்கள்சுயமரியாதை இயக்கத்தின் நோக்கமல்ல.

சுயமரியாதையே

சுகவாழ்வு

ஈரோடு டி. மு. கோர்ட்டு

1929ஞு S. C. நெ. 1203

கோயமுத்தூர் டவுனிலிருக்கும் முத்துச்சாமி செட்டியார் மகன் சி. எம். தருமலிங்கம் செட்டியார் —வாதி

ஈரோடு தாலூக்கா காளிங்கராயன் பாளையத்திலிருக்கும் ரங்க போயன் மகன் டி. ஆர். ராமசாமி போயன் —பிரதிவாதி

ஷை கெம்பர் பிரதிவாதிக்கு வாதிக்காக வக்கீல் இ. வி. நஞ்சப்ப செட்டியார் தெரிவிப்பது,

ஷை கெம்பரில் உம்முடையபேரில் வாதி பெற்றிருக்கும் மோடேசபர் புரோ கோட்டுப்படி ரூ. 184-11-0 கிடைக்கவேணுமாய்த் தாவாசெய்து 10-1-1930 தேதி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதி நீர் ஆஜராகாவிடில் ஒரு தலைப்பட்சமாய்த் தீர்மானிக்கப்படும்.

இ. வி. நஞ்சப்ப செட்டியார்,
வாதி வக்கீல்.

ஈரோடு,
15-12-29.

கடவுள் கடவுளென

காசை அலையாதே

## சுயமரியாதைத் திருமணங்கள்

தென்மாம்பட்டு வைக்கம் வீரர் வாசகசாலை தோன்றி இன்னும் ஓர் ஆண்டு நிறைவில்லை யாயினும், அதன் உழைப்பால் பல சுயமரியாதைத் திருமணங்கள் நடந்தேறியிருக்கின்றது. சுற்றுப்புறங்களிலும்சுயமரியாதைக் கொள்கையை முழுமனதுடன் ஆதரித்ததின் அறிகுறியாக 4-12-29 இரவு 10 மணிக்கு திருப்பத்தூர் பிரபல காண்டோ திருவாளர் முத்துவேல் பிள்ளை அவர்கட்கும், நிறைநாட் செல்வி மூக்காயி அம்மாளுக்கும், 5-12-29ல் தம்பிபட்டி திரு. கோபால் பிள்ளை குமாரன் திருவளர் செல்வன் இராமலிங்கம் அவர்கட்கும், மேற்படியூர் திரு குருநாத பிள்ளை குமாரி திருவளர் செல்வி சிவகாமி அம்மாளுக்கும், 8-12-29 முற்பகல் 11 மணிக்கு மேற்படியூர் திரு.பா. ச ப.சண்முகம்பிள்ளை அவர்கட்கும், அன்னவாசல் வைகாபுரி பிள்ளை மகள் திருச்செல்வி சிட்டு அம்மாளுக்கும் அதிக பொருட்செலவின்றி புரோகிதமொழிந்த திருமணங்கள் இனிது நடைபெற்றன. அவ்வமயம் வைக்கம்வீரர்வாசகசாலையின் சார்பாய் திரு வ. ரத்ன சபாபதி அவர்களும், நச்சியார்புரம் திருமிகு என். ஆத்மாராம அவர்களும் புதிய தம்பதிகளை வாழ்த்துங் கூறுமோத்தான் அறியாமையால் நடாத்தும் மூடச் சடங்கின் இழிவையும் சுயமரியாதைத் திருமணத்தின் உயர்வையும்பற்றி சபையோர் ஒப்புக் கொள்ளும் வண்ணம் முறையே நீண்டவிரிவுரை நிகழ்த்தினார்கள் என்று காரியதரிசி ஆர். முத்துராமன் எழுதுகிறார்.

* * *

தும்பகோணம் :—கும்பகோணம் ரயிலடித்தெருவில் 8-12-29 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணிக்கு சென்னை, திரு. முத்து ராமலிங்கம்பிள்ளை குமாரன் திரு. இராமச்சந்திரனுக்கும், பட்டுக்கோட்டை ரேடீவ் டாக்டர் திரு. கணேச பிள்ளை குமாரத்தி திருவளர்ச் செல்வி சரஸ்வதி அம்மாளுக்கும் சுயமரியாதை முறையில் பார்ப்பன புரோகிதம் அறவே இல்லாத திருமணம் இனிது நிறைவேறியது. அவ்வமயம் இவ்வூர் சுயமரியாதைச் சங்க அங்கத்தினர், பெரும்பான்மையோர் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தும் சுயமரியாதைத் திருமணத்தைப்பற்றி கேட்டோர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு விளக்கிக்கூறினார்கள். அதுசமயம் குடி அரசின் வளர்ச்சிக்காக மண மக்களின் இல்லத்தாரால் ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

கோவை:—கோவை தாலூக்கா அத்திப்பாளையம் கிராமத்தில் திரு. இராஜு நாயுடுவின் தங்கை திரு நிறைச்செல்வி நாரம்மாளுக்கும், நிறைநாட் செல்வன் கோ. இரங்கைய்ய நாயுடுவுக்கும், 5-12-29ம் நாள் காலை 6-மணிக்கு பெண்ணின் இல்லத்தார் வீட்டில், இவ்வூர் பிரபல மிராஸ்தார் என். ஆர். இராமகிருஷ்ண நாயுடுகாருடையவும், இவ்வூர் ஐக்கிய நாணய சங்கத்தின் காரியதரிசி கே. கோவிந்தசாமியினுடையவும், அக்கிராசன புரோகிதத்தின் கீழ், பார்ப்பனரை விலக்கி, அநேகம் அர்த்தமில்லாத மூடச்சடங்குகளை விலக்கி இனிதாக மணம் நடத்தப்பட்டது.

* * *

பர்மா:—பர்மா டாங்கோ ஜில்லாவைச்சேர்ந்த "கஞ்ஞாக்குவின்" என்னுமூரில் பிரபலமிலச் சுவாந்தாரரும் நியக்திராலயச் சொந்தக்காரருமாகிய திரு. பெ. சி. சின்னய்யா சேர்வை ஸ்ரீமதி மாப்புவாசெயின் என்பவரின் சிரேஷ்ட குமாரி திருவளர்ச் செல்வி மாத்தெய்னு என்றழைக்கும் இராஜாமணி அம்மாளுக்கும், மோல்மேன் மிலச்சுவாந்தாரர் திரு. சின்னய்யா சேர்வை ஸ்ரீமதி மாலட்சுமி அவர்களின் கனிஷ்டகுமாரன் திருவளர் செல்வர் ப. சி சுந்தரஞ் சேர்வை எம். பி. பி. எஸ். அவர்கட்கும் மணமகள் இல்லத்தில் நிகழும் சுக்கில ஆண்டு ஐப்பசி திங்கள் 23ம் நாள் 8—11—29ல் பகல் ஒன்றே கால் மணி அளவில் பொருளில்லன் காப்புன் மொழியாகிய மூடப்புரோகிதச் சடங்கை அறவே ஒழித்துதமிழ் மக்களையும் பர்மியமக்களையும் தலைவராகக்கொண்ட தமிழ்சுயமரியாதை கலப்புத் திருமணம் வெகு சிறப்புடன் நடைபெற்றது. இச்சுயமரியாதைக்கலப்புத் திருமணத்திற்குபர்மாவின் பல பாகங்களிலிருந்தும் இந்துபர்மிய முஸ்லிம் சைனதிறீனது சகோதர சகோதரிகளும், நாட்டுகோட்டை நகரத்தாரவர்களும் யதுகுமார் கண்ணன் முதலியோரும் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்து சமபந்தி போஜனமுண்டு விவாக வைபவம் வெகு சிறப்புற நடத்திவைத்தனர். தமிழ்த்தெய்வம் மணமக்களை நீடூழி வாழக்கிருபை புரியவேண்டுகிறேன் என ஸ்ரீலட்சுமிகுமாரன் எழுதுகிறார்.


றேப்பிப் பவுடர்

இஷ்டப்படி — அருபவிக்க



சுகம்! சுகம்!! சுகம்!!!

சுத்த மூலிகைகளால் செய்தது. காப்பி போன்ற மணம் வாய்ந்தது. (வி. பி. வேறு)

| | | | | |
|---|---|---|---|---|
| ½ சேர் டின் 3 | ரூ. | 1 | 0 | 0 |
| டஜன் ½ | ரூ. | 1 | 12 | 0 |

S. V. ராஜப்பா,
றேப்பி பாக்டரி, பழனி, S.I.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மடத்து வித்வசாஸ்திரிகளும் சாரதா விவாகத்தைக் கண்டிக்கும சனாதன தருமமகாநாடுகளிருப் தாகத் தெரிய வருகிறது ஆதிசங்கரருக்கு ருதுமதி விவாகம்விரோதமாகவிருந்தால் அதை அவர் காலத்தில் கண்டித்திருக்க மாட்டாரா? அவர் ஜாதியானநம்பூதரி ஜாதிகளை திருத்தியிருக்கமாட்டாரா? நம்பூதரி ஜாதியார்களை நரகத்திற்குப்போக விட்டுவைப்பாரா? நம்பூதரி ஜாதியான தன் முன்னோர்கள் சொர்க்கத்திற்குப் போகக்கூடாதென்று நினைத்து விட்டாரா? அவர் பராசரஸ்மிருதியைப் படித்ததில்லையோ? ஆதி சங்கராச்சாரிக்குருதுமதி விவாகத்தின் தோஷத்தைத்தெரிந்து கொள்ளத் தகுந்த சனாதன சாஸ்திரப்பயிற்சி இல்லை என்று இப்பொழுதிருக்கும் சாஸ்திரிகள் சொல்லுகிறார்களா? விவாகம் செய்து கொண்ட நம்பூதரிப் பார்ப்பனர் மற்ற பார்ப்பனரிடம் சாப்பிடமாட்டார்களே? அவர்கள் கிரகஸ்தாஸ்ரம நித்திய கர்மானுஷ்டான விதிகளும் பிதிர்கர்மங்களும் மற்ற பார்ப்பனர்களைவிடஉயர்ந்ததாகவல்லவோ காட்டுகிறார்கள். அதை மற்ற பார்ப்பனர்களும் மலையாளத்தில் ஒத்து நடக்கிறார்களே! ருதுமதி விவாகத்தால் ஜாதிபிரஷ்டமும் சனாதனதருமம்கெட்டும் நித்யகர்மானுஷ்டானங்கள் தடைபட்டும் போவதாயிருந்தால் அப்படியிருக்கும் ஜாதியான நம்பூதரிப்பார்ப்பனர்களை மற்ற பார்ப்பனர்கள் உயர்வாக நினைத்து அவர்களுடன் கூடிக்கூலாவி அவர்கள் தயவை எதிர்பார்த்து காலம் நடத்துவானேன்? நம்பூதரிகள் நடத்தும் பிதிர் கர்மங்களில் சோற்றுக்கும் தட்சணைக்கும் பார்ப்பனன் ஏன் போகிறான். குருவான சங்கராச்சாரிக்கும் அவர் ஜாதிக்கும் ஒரு பராசரஸ்மிருதியும் அவர் சிஷ்யர்களான நமது நாட்டு சனாதன தருமப்பார்ப்பானர்களுக்கு மற்றொரு பராசரஸ்மிருதியுமுண்டோ? ஒன்றானால் வித்தியாசமென இரண்டானால் யாருடையது? சரி, ஒவ்வொரு சனாதன சபைகளிலும் சங்கராச்சாரிவந்திருந்த பெருமையும் அவர் ஸ்ரீமுகம் படிக்கும் பெருமையும் அவர்மடத்து சாஸ்திரிகளின் பிரசங்கப்பெருமையும் எடுத்துக்காட்டுகிறார்கள். குரங்கால் பிழைக்கும் குரங்காட்டி வீடு வீடாய் பிச்சைவாங்கக் குரங்கை அடித்துப் பயப்படுத்தி வயிறுவளர்ப்பதுபோல் சங்கராச்சாரிஎன்றஒருவரைவேஷம் போட்டு, அவர்பின்னுல்பார்ப்பானர்கள் வயிறுவளர்க்கஅவரை ஊர்ஊராய் அழைத்துக்கொண்டுபோய், உபத்திரவப்படுத்தி சுவாமிகளுக்குப்பிச்சையென்றும், பாதக்காணிக்கை என்றும், பாதபூசையென்றும் சொல்லி பணம் பறிக்கும் சனாதனதருமிகள் அவர் மடத்தில் பாடறியாமல்நின்றுகொழுத்திருக்கும் சாஸ்திரிகள் வேஷம் போடப்பட்டசங்கராச்சாரிஅவர் மாபில்வயிறுவளர்க்கும் பார்ப்பானர்கள் இவர்களுக்குச் சாரதாச்சட்டம் விரோதமாக விருப்பது போல். ஆதி சங்கராச்சாரியசுவாமிகளுக்கும் அவர் ஜாதிக்கும் அவர் சாஸ்திரத்திற்கும் விரோதமென்று எந்த சாஸ்திரிகளாவது சொல்லுவார்களா? இராமானுசாசாரிக்குத்தான் ருதுமதி விவாகம் சம்மதமில்லாவிட்டால் ருதுமதிவிவாகம் செய்து கொண்ட கூரத்தாழ்வாரை பிரதமசிஷ்யராகஉடையவர் கொள்ளுவாரா? பிர்மசூத்திரத்திற்குத் தான் சொன்ன உரையை எழுதச் சொல்லுவாரா? ஸ்ரீரங்கம்பெருமாள் தான் கூரத்தாழ்வாருக்குப்பிரசாதம தானே அனுப்புவாரா? கூரத்தாழ்வாரின் ருதுமதியான பெண்ஜாதி எண்ணின எண்ணத்தால் பெருமாள் அனுப்பின பிரசாதத்தை உண்டு அதனால் சாத்திரவியாக்யான அதிருட்ப அறிவையுடைய பட்டர்பிள்ளையாகப் பிறப்பாரா? அந்த காலத்து பாகவத கோஷ்டிகள் தான்ஒத்துக்கொண்டிருக்குமா? இவர்களால் சனாதனதருமம் கெட்டுப்போயிருந்தால் இப்பொழுது அவர்கள் பேரைச் சொல்லிக்கொண்டு வயிற்றைப் பெருக்கடிப்பதெப்படி? அவர்களின் ருதுமதி விவாகத்தால் அவர்களின் பிதிர்க்களெல்லாம் நரகத்திலிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? பிர்மசூத்திரத்திற்கு உரை எழுதுகையில் உடையவர் தவறின இடத்தில் மௌனமாக விருந்து குருவுக்கு நினைவூட்டின கூரத்தாழ்வாருக்குப் பராசரஸ்மிருதி தெரியாதோ? இந்நியாயங்களால் சாரதாச் சட்டம் நமது ஆச்சாரிகளுக்கும் விரோதமல்ல.

சாரதாச்சட்டம் நமது பூர்வகாலத்துராஜாக்களுக்கும் கடவுள் அவதாரங்களான ராஜாக்களுக்கும் விரோதமானதல்ல இந்த காலத்தில் உலகத்திலுள்ள எப்பாகத்து ராஜாக்களுக்கும் விரோதமானதுமல்ல. நமது இந்திய ராஜாங்கத்து இரண்டு மந்திராலோசனை சபைகளில் படிப்பிலும் செல்வத்திலும் மேம்பாடடைந்த நமது தலைவர்களான அறிவாளிகளால் தீர்மானிக்கப்பட்டதல்லவோ சாரதாச் சட்டம்.

நமது ஜாதி ஆசார முறைகள் மதத்தில் கட்டுப்பட்டதாகவும் அது என்றைக்கும் அவரவர்கள் தலையில் ஏற்றியே இருக்கவேண்டுமென்றும் உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்ளும் ஜாதிகள் தங்கள் உயர்விற்கும் காரியலாபத்திற்கும் சொல்லுகிறார்களே யல்லாமல் உண்மையில் சமயங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை. ஜாதிக் கட்டுப்பாட்டைப்பற்றியோ ஆசார வழக்கங்களைப் பின்பற்றியோ பாலிய விவாகத்தை நிலைநிறுத்திக் கொண்டோ சமயம் நிற்காது. இதை எல்லாவற்றையும் கடந்து சகலத்திற்கும் இருதய ஸ்தானமாயுள்ளவிடத்திற்குச் சென்று பரம்பொருளை அதன் உண்மை நிலையில் நேருக்கு நேராய் பார்த்து சொரூபானு சந்தானத்தால் அது தானேயாகி அந்த பரப்பிரமத்துடன் அபேதமாய் கலக்க விரும்புவதைப் பற்றிக் கொண்டிருப்பதே சமயம். இதை இந்த சாஸ்திரத்தின் உண்மை உணர்ந்த பண்டிதன் அறிவான்; இவனே சனாதன தருமி; இவனுக்கும் அந்த சமயத்திற்கும் சாரதா சட்டம் விரோதமானதல்ல.

நமது ஜாதிக் கட்டுப்பாடும் ஆசார வழக்கங்களும் அந்நிய ஆதிக்கத்தினாலும் கூட்டுறவாலும் எவ்வளவு தூரம் உயர்ந்த ஜாதிக்காரர்களிடமிருந்து நீங்கி விட்டதென்பதை கவனித்துப் பாருங்கள். பார்ப்பனனுக்கு ஸ்மிருதியால் ஏற்பட்ட ஐம்பத்தி மூன்று விதி விலக்குகளில் விட்டுவிடச் சொன்னதை எடுத்துக் கொண்டு எடுத்துக்கொள்ளச் சொன்னதை விட்டுவிட்டு, அதைக் குறைவாக சில திருட்டுத்தனத்தோடு ருதுமதி விவாகத்தை விரோதிப்பதற்கு எந்தவித நியாயங்களும் இடம்கொடுக்கவில்லை. உயர்வடைந்து சிறப்பாக வாழும்படியான சமூகம் கனம் வைசிராய் பேச்சை கவனிக்கட்டும். நாசமாய் இன்னும் அடிமைப்பட்டு சீரழியும் சமூகம் 'சனாதனதருமிகள்' பேச்சைக் கொண்டாடட்டும்.

# ஆதிதிராவிடர் கோயிற் பிரவேசம்

## திருவாரூரில் நடந்த சம்பவம்

## சமபந்தி போஜனமும் நடத்தப்பட்டது

திருவாரூர் ஆண்டார் தெரு ஸ்ரீ வீரபத்திர சுவாமி ஆலயத்தில் 16-12-29ல் திருவாளர் லெட்சுமணப்பிள்ளை விடா முயற்சியால் நடைபெற்ற அமுதுபடையலில் ஆதிதிராவிடருள்பட சகலரும்சுவாமி தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டதுடன் சுமார் 300 ஜனங்களுக்கு மேல் ஜாதி மத வித்தியாசமின்றி சமபந்தி போஜனமுமளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குக்காரணம் இங்குள்ள சுயமரியாதைக்காரர்களின் முயற்சியேயாகும்.

இதில் கலந்துகொண்டவர்களில் முக்கியஸ்தர்கள் திருவாளர்கள் லெட்சுமணப் பிள்ளை, என். சுப்பிரமணியம், வி. ஜி. ரெங்கராஜு, எல். ராமசாமி, ஏ. ராஜகோபால், ஆர். வேதய்யா, ஏ. வி. பாலசுப்பிரமணியம் முதலியோராவர். இவ்வாலயத்தில் அடுத்த மாதத்திலும் ஓர் சமபந்தி போஜனம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## பானகல் திருநாள்

## கோயமுத்தூர்

## கோவை தேவாங்க சிறுவர் சபை

பானகல் அரசரது முதலாவது ஞாபகார்த்த விழா சங்கக் கட்டிடத்தில் 16-12-29ந் தேதி திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு திரு. எ. நஞ்சப்ப செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம், திருவாளர்கள் எ. பொன்னுசாமி, எ. கே. பஷீர், இ. தர்மலிங்கம் முதலானவர்கள் பானகல் அரசருடைய ஜீவிய சரித்திரத்தைப் பற்றியும், அவர் பொதுவாக எல்லோருக்கும், குறிப்பாக பிராமணரல்லாதாருக்கும் ஆற்றின தொண்டைப்பற்றியும், அவர காலத்தில் உண்டாக்கப்பட்ட இந்து தேவஸ்தான மசோதாவைப்பற்றியும் ஆகிய விஷயங்களைப் பேசினார்கள். தலைவர் தம் முடிவுரையில் இந்திய அரசியல் மாறுதலடையும் சைமன் கமிஷன் காலத்திலே அவர் இல்லாதது நமது துர் அதிர்ஷ்டமென்று சொன்னது குறிப்பிடத்தக்கது.


## குடி அரசு புத்தகாலயம்.

வேதப்புரட்டை வெளியாக்கும்

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0-12—0 |

8 அணவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்டஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடிஅரசு புத்தகாலயம்,

14, மவுண்ட்ரோட், மதராஸ்.

(எப்)

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜுபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூக்கந் மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 }
சிறிய டின் ரூ. 1—0—0 } தபால் சார்ஜ் வேறு.

# பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

11 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

நீங்கள் நிச்சயத்தில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறீர்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

# சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கண்டசுவாசம் மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9-0-0.
6 டின் விலை ரூ. 5-4-0. 3 டின் விலை ரூ. 3-0-0.
F. M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8-0.
இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S.

# தாதுபுஷ்டிக்கு

பழநி, சி. எம் சாமி,

# மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாது புஷ்டிக்கு சிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போக சக்தி, தாதுபுஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீட்சித்தவர்களுக்கே இதன் அருங்குணம் விளங்கும். 120 குளிகைக்கு ரூ. 10, 60 குளிகைக்கு ரூபா 5, 30 குளிகைக்கு ரூபா 3.

அந்நிய நாட்டார் முன் பணம் ரூபா 5 அனுப்பவும்.

வைத்திய ஆசிரியர், சி. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழநி.

(61 டி)

# தற்புகழ்ச்சியல்ல

Use always by

## Mayavaram, R. S. KRISHNA'S

உலகப் பிரசித்திபெற்ற

ஸத்குரு சிங்கச் சந்தனாதி, பிருங்காமலகம், அரைக்கீரை விதைத்தைலம் முதலியவைகளே உங்கள் மூளைக்கு குளிர்ச்சியைத் தந்து தேக ஆரோக்கியத்தைத் தரக்கூடியது. டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறது. நமது மலையாள ஆயுர்வேதிக் பார்மஸி ஸத்குரு ரத்த சுத்தி மதனாம்ருத மேகராஜ தீபன ஹல்வா, அமுதசுரபி டானிக், காளிங்க ரஸாயனம், லோகா ஆஸவம் முதலியவைகளே ரத்தத்தை சுத்திசெய்து தாதுபுஷ்டியைத்தர வல்லமையுள்ளது. உத்திரவாதமுண்டு.

வியாபாரத்திற்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்
அட்வான்சுடன் ஆர்டர்

மலாய் நாட்டில் கிடைக்கும் இடம்.

நமது R. S. கிருஷ்ணா சிங்கமார்க்கைப் பார்த்து வாங்கவும்.

P. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்,
48-50. சினாங்கு கண்ரோட், சிங்கப்பூர்.

(442)

இதுவரையில் தமிழில் வெளிவராத புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
வெளிநாட்டு ஆர்டர்களுக்கு
முன் பணம் அனுப்பவேண்டும்

மோட்டார் ஸ்கூல் (1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)
இங்கு 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

(11)

த. கு. ஜெ. என். கண்ணப்பர் அவர்களால் சென்னை "நாவலன்" அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.